1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone; No. 100.}

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 37-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

இரவிலே காற்று புயல்போலவீசிக் கொண்டிருக்கிறது. பகலிலே வெயில் அகோரமாக எறிக்கின்றது. மழையுமில்லை. மப்புமில்லை. மந்தாரமுமில்லை.

### பர்மிய குருவானவர்

ஓர்பர்மிய கத்தோலிக்க குருவானவண. கபிரியேல்சுவாமியார் வார்விக்ஷயர்எனும்கப்பலிலே ரோமாபுரிக்குச் செல்லும்வழியில் சென்றசனிக்கிழமை கொழும்புகண்டுசெல்லுகின்றார். இவர் அங்கு பத்திரிகைநிருபர் ஒருவருக்குப் பேட்டியளித்துப்பேசியபோது: "பிரதமர் யு நுஅவர்களது தலைமையின் கீழுள்ள தற்போதைய பர்மா அரசாங்கம் கத்தோலிக்காகிய எங்களுக்குச் சமய சுதந்திரம் அளித்திருக்கின்றது; பர்மாவில் கத்தோலிக்க திருச்சபை ஆறு மேற்றிராணிமாரையும், இருநூறு குருமாரையும் கொண்டிருக்கிறது; அந்நாட்டிலே திருச்சபை மிகப்பெரிய கல்விஸ்தாபனங்களில் சிலவற்றைநடத்திவருகின்றது" எனக் கூறலாயினர். சுவாமியார் கனன்சட்டம் படிப்பதற்கே ரோமாபுரிசெல்லுகின்றார்.

### பிரதமரின் நெடுந்தீவுவிஜயம்

நெடுந்தீவிலே பிரதிநிதிகள்பலரைக் கொண்ட குழுஒன்று அங்குள்ள அரசினர் கனிஷ்டபாடசாலையில் காரியாதிகாரி திரு. எஸ். பாராசசேகரம்அவர்கள் தலைமையிற்கூடிப் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்கள் அங்கு விஜயஞ்செய்யும்போது அவரைத் தகுந்தமரியாதையுடன் வரவேற்று உபசரிப்பதெனத் தீர்மானித்திருக்கிறது. அன்றுதினம் நெடுந்தீவுமக்கள் ஜெற்றியிலேகாத்துநின்று அவரைவரவேற்று அலங்கரிக்கப்பெற்ற தேர்ஒன்றிலே அரசினர்கனிஷ்டபாடசாலைக்கு அழைத்துச்செல்வார்கள். அங்கேஅவர் அக்கலாசாலைப் புதியகட்டடத்தைத் திறந்துவைப்பார். அதைத்தொடர்ந்து ஓர் பகிரங்ககூட்டம் நடந்தேறும். பிந்தப் பிரதமரும், அவர்பரிவாரமும் சிறுவிருந்துபசாரணைபெற்று ஜெற்றிக்குத் திரும்பியதும் புதியயந்திரப்படகுச் சேவையை ஆரம்பித்துவைப்பார்.

### தமிழ்மொழியும் பிரதமரும்

பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்கள் சென்றசெவ்வாயன்று வடமாகாணத்தைச்சேர்ந்த சனப்பிரதிநிதிகளைச் சந்தித்துத் தேசியபாஷையென்றமுறையிலே தமிழின் எதிர்காலத்தைப்பற்றி அவர்கள்மனதிலிருந்த அச்சத்தை நீக்கிவிட்டிருக்கின்றார். சிங்களத்தைப்போலவே தமிழும் சரிசமமாகப் பாவிக்கப்படுமென அவர் தமிழ்ப்பிரதிநிதிகளிடம் வற்புறுத்திக் கூறலாயினர். தேசியபாஷைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதையிட்டுக் கையாளவேண்டிய வழிவகைகள், முறைகள்பற்றியும் அவர்களுடன் பிரதமர் கலந்துரையாடினர்.

ஐப்பசி



8, 9, 10.

## மரியாயின் புனிதவருடக் கொண்டாட்டம்

### இதோ மரியாயின் வருடம்

இற்றைக்கு ஒருநூற்றாண்டின்முன் "மரியாயின் அமலோற்பவம்" ஓர்விசுவாச சத்தியமாக மகிமைப்படுத்தப் பட்டது. ஆகவே, அகிலஉலக கத்தோலிக்கமக்களும் இந்தநூற்றாண்டுவிழாவை நமது பரலோகஇராணியும், மாதாவுமான மரியாயின் உந்நதமகிமைக்கேற்ற பக்திநேசத்தோடு கொண்டாடுகின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலே இக்கொண்டாட்டவைபவம் ஞானோபதேசக் காட்சியுடனும், விசுவாசிகளின் சமாகமத்துடனும் ஆரம்பமாகும். ஞானோபதேசக்காட்சி அடுத்துநிகழும் ஐப்பசிமாதம் 7-ந் திகதி வியாழக்கிழமை சாயந்தரம் ஆரம்பமாகிப் 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவாகும்.

### கொண்டாட்டநிலையம் — யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார்கல்லூரி

விசுவாசிகளின்சமாகமம் ஐப்பசிமாதம் 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரிமைதானத்தில் திவ்வியபூசைப்பலியுடன் ஆரம்பமாகும். அன்றுசாயந்தரம் 3-45 மணிக்குக் கல்லூரிமைதானத்திலிருந்து ஓர் அலங்கார ஊர்வலம் யாழ்ப்பாணமுற்றவெளிக்குச் செல்லும்.

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச்சேர்ந்த சகல விசாரணைப்பங்குகளிலிருந்தும் பிரதிநிதிகள்வந்து இந்தஊர்வலத்தில் கலந்துகொள்வார்கள். வெற்றி விருதுகளுடன் தேவதாயாரின் திருச்சுரூப ஊர்வலம் நடைபெறும்.

முற்றவெளியிலே திருச்சுரூபத்துக்குப் பகிரங்கவரவேற்பு அளிக்கப்படும் பாடசாலைப்பிள்ளைகள் செபமாலையைப்போன்று அணிவகுத்துநிற்பார்கள். செபமாலைத்தியானப் பரமஇரகசியக்காட்சிகள் தத்ரூபமாகக் காண்பிக்கப்படும். பிள்ளைகள் ஞானப்பூச்செண்டுகளை மாதாவுக்குச் சமர்ப்பிப்பார்கள். அதன்பின் அமலோற்பவநாயகிக்கு மேற்றிராசனத்தை ஒப்புக்கொடுக்கும் திருச்சடங்கு விமரிசையாக நடந்தேறும். திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடன் கொண்டாட்டம் முடிவெய்தும்.

மாதாவை மகிமைப்படுத்த முழுப்பலத்தோடும் முயலுங்கள். செபமாலை, பூசை, நிறைவேற்றம், சற்பிரசாத சந்திப்புஆதிய பக்திக்கிருத்தியங்கள்அடங்கிய ஞானப்பூச்செண்டுகளை அபரிமிதமாகச் சேகரியுங்கள். அவைகளை உங்கள் பிரதிநிதிகள்மூலம் நமது திவ்வியதாயாரின் திருப்பாத கமலங்களில் காணிக்கையாகவையுங்கள்.

சமாகமத்திற்சேர்ந்து அன்றுநிறைவேறவிருக்கும் திவ்வியபூசைப் பலியில் பங்குபற்றித் தேவநற்கருணைபெற்றுப் பலன் அடையுங்கள். நமதுதிருத்தாயாரின் அப்போஸ்தலராகத் தொண்டாற்றுங்கள். உங்களைச்சேர்ந்தோர் அனைவரையும் தாயாரை நேசித்துவந்திக்கச் செய்யுங்கள். தாயார்பேரால் நடைபெறும் பக்திக்கூட்டங்களுள் ஒன்றிற்சேர்ந்து ஞானத்தொண்டாற்றுங்கள். ஊர்வலம்செல்லும் பாதையை வெண்மையும், நீலமும்கலந்த வர்ணக்கொடிகளால் அலங்கரியுங்கள். உங்கள்வீட்டுப் பக்கத்தால் ஊர்வலஞ் செல்லாவிடின் அலங்கரிப்பாரற்று வெளியாயிருக்கும் இடங்களை அலங்காரஞ்செய்யுங்கள்.

எல்லோரும் ஏகோபித்து எங்கள் இருதயங்களில்
யேசுநாதரையும், தேவமாதாவையும்
ஸ்தாபிப்போமாக!

### கமக்காரருக்கு அரிசிக்கூப்பன்

நெல்வேளாண்மைசெய்யும் கமக்காரருக்கு இதுவரை அரிசிக்கூப்பன் புத்தகங்கள் மறுக்கப்பட்டுவந்தன. ஆயின் இனிமேல் அவர்களுக்கும் அவற்றைவழங்க அரசாங்கம் சென்ற வியாழக்கிழமை தீர்மானித்துள்ளது. இதற்குக்காரணம், போதியஅரிசி கையிருப்பில் இருப்பதேயாகும். இவர்களுக்கும், இவர்கள்குடும்பத்தினருக்கும் வழங்குவதற்கு மூன்றுலட்சம் அரிசிக்கூப்பன்புத்தகங்கள் தேவைப்படும்.

### நீதிபதியின் முறையீடு

"யாழ்ப்பாணமக்கள் விரும்பத்தகாதஅளவிலே தங்கள்நேரத்தையும், பணத்தையும்செலவுசெய்து வழக்காடுகிறார்கள்; யாழ்ப்பாணமக்களிடம் ஏராளமான பணம்இல்லை; ஆனால், அவர்கள் முயற்சியுடையவர்கள்; இந்த முயற்சியை அநாவசயமாகக் கோடுகளில் பிரயோசிப்பதைக்காண எனக்கு மிகவும் கவலையாயிருக்கிறது" என்று யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதியாகிய திரு. பி. சிறீஸ்கந்தராசா அவர்கள் மல்லாகத்தில் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற ஓர்கூட்டத்தில் தெரிவித்திருக்கின்றார்.

### புதிய உபதபாற்கந்தோர்கள்

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அடுத்தவருடம் முடிவதற்குள் ஏறக்குறைய 250 உபதபாற்கந்தோர்கள் திறக்கப்படவிருக்கின்றன. இவற்றிற்குத் தேவைப்படும்பணத்தைத் திறைசேரி வழங்கியிருக்கிறது. இவற்றில்கடமைபார்க்கும் போஸ்ற்மாஸ்றர்மார் அடுத்த மூன்றுமாதங்களுள் தெரிவுசெய்யப் படுவார்களெனத் தற்காலிக தபால் – வானொலிமந்திரியார் தெரிவித்திருக்கின்றார். களவுகள் நடைபெற்ற காரணமாக மூடப்பட்ட அநேகதபாற்கந்தோர்கள் திரும்பவும் திறக்கப்படவிருக்கின்றன.

### மயிலிட்டியிலே பிடிபட்ட வள்ளம்

வல்வெட்டித்துறையில் ரேகுப்பகுதித் துணைஅதிகாரியான திரு. பி. ஈ. ஜெருபேட்என்பவர் தலைமையில் சென்ற சிலர்சென்ற ஞாயிற்றுக்கிழமையிரவு மயிலிட்டிக் கரையையடுத்து ஒருவள்ளம் சிலருடன் நிற்பதைக்கவனித்து, அவ்விடஞ்சென்று அவ்வள்ளத்தையும், அதிராம் பட்டணத்தைச்சேர்ந்த இந்தியர் மூவரையும், பன்னிரண்டுமூடை வெள்ளைக்கசகசாவையும் கைப்பற்றினரெனத் தெரியவருகிறது. அவ்வள்ளத்தில் வந்தவர்களெனக் கருதப்படும் மற்றும்மூன்று இந்தியர்கள் கடலில் குதித்து மறைந்துவிட்டார்கள்.

### மலிவான பர்மா அரிசி

இவ்வருடத்திலே பர்மா அரசாங்கம் ஒப்பந்தப்படி இலங்கைக்குக் கொடுக்க வேண்டிய அரிசிஇரண்டுலட்சம்தொன், இதில் ஒன்றரைலட்சம் தொன்னையும் இலங்கைஏலவேதானே பெற்றுவிட்டது. மீதியாகக்கொடுக்க வேண்டிய ஐம்பதினாயிரம்தொன் அரிசியையும் அது தொன்ஒன்று 35 பவுண்வீதம் விலைகுறைத்துக் கொடுப்பதற்கு ஏறக்குறைய இணங்கிவிட்டதாகத் தெரியவருகிறது. அதனால் இலங்கைக்கு ஒருகோடி ரூபாவுக்குமேல் மிச்சம் ஏற்படுமெனச் சொல்லப்படுகிறது. ஆனால், ஒப்பந்தப்படி வாங்குவதாக ஒப்புக்கொண்ட இரண்டுலட்சம்தொன் அரிசியிலும் மீதியான ஐம்பதினாயிரம் தொன்னின்விலையையும் தொன் ஒன்றுக்கு 35 பவுண்வீதம் குறைத்துக் கொடுக்க வேண்டுமென இலங்கைஅரசாங்கம் கேட்டதாகவும், பர்மியஅரசாங்கம் அதற்குமறுத்துவிட்டதாகவும், ஆனால், மேலதிகமாக ஒருதொன் 35 பவுண்விலையில் மேலும் ஐம்பதினாயிரம் தொன் கொடுக்க அது முன்வந்திருப்பதாகவும் மற்றோர்செய்திமூலம் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்திலே
# பிரதமரின் சுற்றுப்பிரயாணம்

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவல அவர்கள் இம்மாதம் 27-ந் திகதி திங்கட்கிழமை மாலை கொழும்பிலிருந்து புறப்பட்டு 28-ந் திகதி செவ்வாய்க்கிழமைகாலை யாழ்ப்பாணம்வந்து சேர்வார்.

### செவ்வாய்க்கிழமை
காலை 6 மணிக்கு நாவற்குளியில் நிறுத்திவிடப்பட்ட தமது விசேஷ சலூன் வண்டிமூலம் காலை 8-30க்கு அவர் யாழ்ப்பாணப் புகையிரதஸ்தானத்தை அடைவார்.

புகையிரதஸ்தானத்தில் வடமாகாண அதிபாலே யாழ்ப்பாணப்பிரமுகர்கள் அறிமுகம்செய்து வைக்கப்பட்டபின் மாட்டின்வீதி, பெரியவீதி வழியாகப் பிரதமர் ஊர்வலமாக நகரமண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்படுவர். 10-30 மணிக்கு நகரமண்டபத்தில் பொதுவரவேற்பு அளிக்கப்பட்டபின் நகரசபைஅங்கத்தவர்களையும், அதன் தலைவரையும் சந்திப்பார்.

பிற்பகல் சாரணச்சிறுமிகளின் அணிவகுப்பைப் பார்வையிடுவார். பின்னர் 5மணிக்குக் கொக்குவிலிலிருந்து அவர் ஊர்வலமாக நகரமண்டப மைதானத்திற்கு அழைத்துவரப்படுவர். அங்கே ஒரு பொதுவரவேற்பு அளிக்கப்படும். அதன்மேல் வாணவேடிக்கை நடைபெறும். அன்றிரவு யாழ்ப்பாணத் தெனிஸ்கிளப் அவருக்கு ஓர் விருந்தளிக்கும்.

### புதன்கிழமை
காலை 7-30 மணிக்கு ஐந்துமுச்சந்தியில் சிறிதுநேரம்தங்குவார். அதன்பின் ஆனைக்கோட்டைச்சந்தியில் மானிப்பாய்க் கிராமச்சங்கதலைவரால் வரவேற்கப்பெற்று, மானிப்பாயில் காலை 8-30 மணிக்குப் பொதுவரவேற்புப்பெறுவர். காலை 9 மணிமுதல் மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஞாபகார்த்த கல்லூரி, கிறீன்ஞாபகவைத்தியசாலை, இளவாலை சென்என்றீஸ்கல்லூரி, பண்டத்தெருப்புப் பெண்பாடசாலை முதலியவற்றைப் பார்வையிடச்செல்வார். பின்னர் யாழ்ப்பாணக்கல்லூரியில் நண்பகல் விருந்தருந்துவார். பிற்பகல் மூளாய்க் கூட்டுறவு வைத்தியசாலை, விக்ரோறியாக்கல்லூரி, இணுவில் வைத்தியசாலை ஆகியவற்றிற்கு விஜயஞ்செய்வார்.

மாலை 4-45 மணிக்குக் காலிங்கன் படக்காட்சிமண்டபத்தில அவருக்கு ஒரு பொதுவரவேற்பு அளிக்கப்படும். மாலை 6 மணிக்கு இராமநாதன்கல்லூரியில் லேடிஇராமநாதனின் உருவப்படத்தை அவர் திறந்துவைப்பார். மாலை 7-45 மணிக்கு வல்வெட்டித்துறையில் பொதுவரவேற்பு நடைபெறும். அதன்மேல் அவர் யாழ்ப்பாணம் திரும்புவார்.

### வியாழக்கிழமை
காலை 8 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்துபுறப்பட்டுக் கோதீவுத் தாம்போதிச்சேவையைப் பார்வையிட்டபின் 9-30மணிக்குப் பூநகரிப்பகுதிக்கு விஜயஞ்செய்வார். 11 மணிக்கு வட்டக்கச்சிக் குடியேற்றதிட்டத்தையும், 12-15 மணிக்கு முரசுமோட்டைக் குடியேற்றதிட்டத்தையும் பார்வையிடுவார். ஆனையிறவுவாடிவீட்டில் நண்பகல் போசனத்தின்பின் பிற்பகல் 5 மணிவரை கரைச்சி, தென்மராட்சிப் பகுதியைப் பார்வையிடுவார். மாலை 5 மணிக்குச் சாவகச்சேரியில் அளிக்கப்படும் பொதுவரவேற்பின்பின்னர் யாழ்ப்பாணம் திரும்புவார்.

### வெள்ளிக்கிழமை
காலை 8 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்துபுறப்பட்டுக் காரைநகர்மார்க்கமாக யந்திரப்படகில் நயினாதீவுக்குப் புறப்பட்டு 9-45 மணிக்கு அங்கு போய்ச் சேருவார். அதன்பின் 11 மணிக்கு நெடுந்தீவு போய்ச்சேரும் பிரதமர் நண்பகல் போசனத்தின்பின் அரசினர் கனிஷ்டபாடசாலைப் புதிய கட்டடத்தைத் திறந்துவைப்பதுடன் புதிய யந்திரப்படகுச் சேவையையும் ஆரம்பித்துவைப்பார். மாலை 6மணிக்கு ஊர்காவற்றுறைவந்துசேரும் பிரதமர் 6மணிக்கு வேலணையில் மரம்நாட்டும் இயக்கத்தை ஆரம்பித்துவைப்பார். அதன்பின் வேலணைமத்தியபாடசாலைக் கட்டடத்தைத் திறந்துவைப்பார். இரவு ஊர்காவற்றுறையிலேயே தங்குவார்.

### சனிக்கிழமை
காலை 9-30 மணிக்குக் கைதடி வயோதிகர்விடுதியைத் திறந்துவைப்பார். 10-30 மணிக்குக் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக் கட்டடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டுவார். பின்னர் கோப்பாயிலுள்ள கூடைபின்னும் பயிற்சிநிலையம், நீர்வேலிச்சங்கம், புத்தூர்வைத்தியசாலை, புத்தூர் நிலாவரைத்திட்டம் ஆகியவற்றைப் பார்வையிடுவார். பிற்பகல் 4-30 மணிக்கு யாழ்ப்பாணக் கூட்டுறவு மாகாணவங்கியைத் திறந்துவைப்பார். மாலை 5-30 மணிக்குக் கச்சேரி 'ஓல்ட்பாக்'கில் வடமாகாணஅதிபர், காரியாதிகாரிகள் அளிக்கும் தேநீர்விருந்தில் பங்குபற்றுவார். பின்னர் 7-15 மணிக்கு நீர்வேலி அத்தியார்இந்துக்கல்லூரியில் நடக்கும் பொதுக்கூட்டத்துக்குச் சமூகமளிப்பார். அன்று இரவைக் காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையிலுள்ள விருந்தாடிகள்விடுதியில் செலவழிப்பார்.

### ஞாயிற்றுக்கிழமை
காலை 8-15 மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு நெல்லியடிக்குச் செல்வார். அன்று நண்பகல் பருத்தித்துறையில் போசனம் உண்பார். மாலை 4-30 மணிக்கு வட்டுக்கோட்டையில் அவருக்கு ஒருபொதுவரவேற்பு அளிக்கப்படும். இரவு 7-40 மணிக்கு யாழ்ப்பாண நடனக்கல்லூரிக்கு விஜயஞ்செய்வார். இரவு 8-50மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படுவார்.

# கிணற்றருகில்
(J. M.)

தெருஓரத்தில் தனித்துநின்றது ஓர் குடிசை. அதன்சன்னல்வழியே எட்டிப்பார்த்துக் கொண்டிருந்த ஓர்நங்கை மத்தியானவெயிலில் ஓர் குடத்தை இடுப்பில் இடுக்கிக்கொண்டு குடிசையிலிருந்து வெளியேவந்தாள். மனிதசஞ்சாரமற்ற சாலையினூடே தன்னந்தனியே ஊருக்கு வெளியிலுள்ள பொதுக்கிணற்றை நோக்கிச்சென்றாள் அவள்.

அப்பேரழகி ஊருக்குவெளியில் கால்வைப்பதற்குமுன்னமே நாலைந்துபிரயாணிகள் எதிரேவந்தனர். அவர்களை உற்றுக்கவனித்தாள். அவள்உள்ளம் துள்ளிக் குதித்தது. அவர்களுடன் சற்றேபேசிக் குலாவவிரும்பினாள். தான்புனைந்திருந்த மணியாடையின் நுனியால் தனதுமுகத்தைத் துடைத்தாள். கருங்கூந்தலை மெதுவாகத் தடவி மினுக்கினாள். முகத்திலும் முறுவல் பூத்தது. அவர்களுடைய பார்வையைத் தன்மேலிழுக்கப் பலவிதமாகப்பாடுபட்டாள். ஆனால், ஒன்றும் தெரியாதவர்களைப்போல அவர்கள் நிமிர்ந்துபார்த்துவிட்டு அவளைக் கடந்து ஊருக்குச்சென்றுவிட்டார்கள். இதுஅம்மங்கைக்கு ஏமாற்றத்தைத்தந்தது.

அவள்உள்ளத்தில் எழுந்து ஓங்கி மோதிக்கொண்டிருந்த எண்ணஅலைகளை அடக்க முயற்சித்துக்கொண்டே கிணற்றண்டைபோய்ச் சேர்ந்தாள். அலுத்துக்களைப்புற்றுச்சோர்வடைந்த தோற்றத்துடன் யாரையோ எதிர்பார்த்துக்கொண்டு சிந்தனையில்ஆழ்ந்து கிணற்றடியில் அமர்ந்திருந்தார்ஒருவர். மனம்பதறாமல் அவரை உற்றுப்பார்த்தாள். அவருடைய முகத்தோற்றத்திலிருந்தும், நடைஉடைபாவனைகளிலிருந்தும் அவர் யூதவம்சத்திலஉதித்த ஓர் ஞானியென்று தெரிந்துகொண்டாள். சமாரித்தரை இழிகுலத்தாரென இகழ்ந்துஒதுக்கி அவர்களிட்டவே போகமறுத்த யூதர்களில்ஒருவர் சமாரியர்களுக்குச் சொந்தமான யாக்கோபின்கிணற்றருகில் உட்கார்ந்திருப்பதைக்கண்டு சந்தேகப்பட்டாள்.

தண்ணீர்இறைத்துத் தன்பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு போகத் தொடங்கிய அப்பெண்ணிடம்: "எனக்குக்குடிக்கக் கொஞ்சம்தண்ணீர் கொடு அம்மா" என்று ஈனகுரலில்கேட்டார் அம்மனிதர். அவள்முகத்தில் ஏளனப்புன்முறுவல் தோன்றிப்பரவியதை அவர்பார்க்கவில்லை.

"நீர் யூதனாயிருக்க, ஏழைச்சமாரிய ஸ்திரீயாகியஎன்னிடத்தில் குடிக்கத் தண்ணீர் கேட்பதெப்படி? யூதர் சமாரியரோடு கூடப் புழங்குவதில்லையே!"

பரிகாசத்தொனியில் சொன்ன இவ்வார்த்தைகளைச் செவியுற்றதும் பசியால்மெலிந்து, நாவரண்டு சோர்வுற்றிருந்த அவர் தமது திருமுகத்தை நிமிர்த்தி அன்புடன் அவளைஉற்றுப்பார்த்தார்.

"நீ சர்வேசுரனுடையவரத்தையும், எனக்குத் தாகத்துக்குத் தாவென்று கேட்கிறவர் இன்னாரென்பதையும் அறிந்திருந்தால் நீயே அவரிடத்தில் ஒருவேளைகேட்டிருப்பாய்; அவரும் உனக்குச் சீவசலத்தைக் கொடுத்திருப்பார்" என்றார்

யேசுநாதர் தமதுவார்த்தைகளின் கருத்தைச் சற்றேவிளக்கியபின் சொல்லுவார்:

"நீபோய் உன்புருஷனை இங்கே அழைத்துக்கொண்டுவா."

"எனக்குப் புருஷனில்லை."

"உனக்குப் புருஷனில்லையென்று நன்றாய்ச்சொன்னாய்; ஏனெனில், உனக்கு ஐந்துபுருஷர்கள் இருந்தார்கள்; இப்பொழுது உனக்குஇருக்கிறவனும் உன்னுடைய புருஷன் அல்ல; நீசொன்னது உண்மைதான்."

அவளுடைய அந்தரங்க வாழ்க்கைவரலாறு அனைத்துமே அவருக்குவிபரமாகத் தெரியுமென்று உணர்ந்ததும் அவள்முகம் நாணத்தாற்சிவந்தது. தனது பாவசீவியத்தைப்பற்றி வெட்கப்பட்டாள். அதைப்பற்றிப் பேச இடங்கொடாமல் யூதர்களுடைய ஆராதனைக்கிரமங்களைப்பற்றிச் சில கேள்விகள் கேட்டாள். உடனே பரலோகபிதாவைப்பற்றியும், நித்திய சீவியத்தைப்பற்றியும் பேச்செடுத்தார் யேசுநாதர்.

"கிறீஸ்துநாதர் என்னப்படுகிற மெசியாஸ் வருகிறாரென்று அறிவேன். அவர்வரும்போது எல்லாவற்றையும் எங்களுக்கு அறிவிப்பார்" என்றாள் அப்பேதைப்பெண்.

திவ்வியஇரட்சகரில் அவளுடைய விசுவாசத்தையும், நம்பிக்கையையும் நன்குணர்ந்தயேசுநாதர் உண்மையை இன்னும் அவளிடமிருந்து மறைக்க விரும்பவில்லை.

"உன்னோடு பேசுகிறநானே அவர்" என்று தெளிவாகச்சொல்லி அவர்தலை உயர்த்தியதும், ஊருக்குள்உணவுப்பண்டங்களை வாங்கப்போன தமதுசீடர்கள் திரும்பிவருவதைப் பார்த்தார். அவர்கள் தங்கள்குருநாதருடன் தனிமையில் பேசிக்கொண்டிருந்த அவளைக் கூர்ந்துகவனித்தார்கள். ஆனால், இம்முறை அவர்களுடன்பேச அவள் ஆசிக்கவில்லை. தண்ணீர்மொள்ளக் கொண்டுவந்தகுடத்தைக் கிணற்றுச் சுவரிலே வைத்துவிட்டு விரைந்தோடி ஊரைச்சேர்ந்தாள்.

"இதோ! நம்மை இரட்சிக்கவரும் கிறீஸ்துநாதர் நம்ஊருக்கே வந்திருக்கிறார். வாருங்கள், அவரைவரவேற்போம். அவர் அறிவுமொழிகளைக் கேட்போம்" என்றெல்லாம் வீடுவீடாகச்சென்று கத்தினாள். எல்லோரையும்அலட்டினாள்.

இதுகாறும் தனது துர்நடத்தையினால் ஊர்ச்சனங்களுக்குத் துர்மாதிரிகை காண்பித்துவந்தமாது ஆண்டவரின்திருவருளால் மனம்மாறி அவரை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துபவளானாள். அவளுடைய வற்புறுத்தற்கிணங்கி ஊர்ப்பெரியோர்களில் சிலர் யேசுநாதரை வந்து சந்தித்தனர். அவரை ஊருக்குஅழைத்தனர். விருந்தளித்தனர். அவருடையஉபதேசத்தைக் கேட்டனர். "அவரும் இரண்டு நாள் அங்கேதங்கினார். அப்பொழுது அவருடைய போதகத்தினிமித்தம் முன்னிலும்அநேகம்பேர் அவரைவிசுவசித்தார்கள்... அவர் மெய்யாகவே உலகஇரட்சகரென்று அறிந்தார்கள்."

(அரு. 4 : 40-42)

● கத்தோலிக்க திருச்சபைக்குரியதான இந்தியாவின் பதினேழாவது கத்தோலிக்கபெண்கள் கல்லூரி சலேசியன்சபைக் கன்னியாஸ்திரீமாரால் சமீபத்திலே திறக்கப்பட்டிருக்கிறது. ஆக்ஸிலியம் கல்லூரியென நாமந்தாங்கியுள்ள இந்தக்கல்லூரி சென்னைச்சர்வகலாசாலையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

● கரும்பின்சக்கையிலிருந்து குளுக்கோஸ்எனப்படும் உணவுச்சத்தை எளிதில் உற்பத்திசெய்யலாமென்று பூனாநகரிலுள்ள தேசியஇரசாயன ஆராய்ச்சி மன்றத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வருடந்தோறும் இந்தியாவில் ஏறக்குறைய 3 கோடியே 50லட்சம் தொன் கரும்புச்சக்கை பயனற்ற பொருளாய்த் தீக்கிரையாகிறது. இந்தச்சக்கை முழுவதையுஞ் சேர்த்துக் குளுக்கோஸ்செய்வதற்கான ஆரம்ப ஆராய்ச்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

● அணுச்சக்திகொண்டு இயக்கப்படும்முதலாவதுசப்மறினாகிய "நோட்டிலஸ்" எனும் அமெரிக்ககப்பல் இற்றைக்கு ஒன்பதுமாதங்களின்முன் கடலில் மிதத்திவிடப்படலாயிற்று. இம்மாதம் 30-ந் திகதியன்று இது அமெரிக்ககடற்படையினிடம் ஒப்படைக்கப்பெற்றுப் பரிசோதனை நடத்தப்படும். அமெரிக்கஅரசு இதைப்போல வேறும் மூன்று சப்மறின்களைக் கட்டிவருகிறது.

● அப்போது பரிசுத்தபாப்பரசர் குருப்பட்டம்பெற்றபின் அவரதுமுதற்பூசைக்கு உதவிசெய்த அல்செஸ் தெறுஸ்ஸோனிஎன்பவர் தனது 82-ம் வயதிலே சிலதினங்களின்முன் காலஞ்செல்லலாயினர். இவர் அர்ச். பேதுரு வானவர்மகாலயத்தில் பணியாற்றிய நிபுணசிற்பிகளில் மூப்புடையவர். ஏறக்குறைய எழுபது வருடங்களாக அம்மகாலயத்தில் இவர் பணியாற்றி இருக்கின்றார்.

● பெல்ஜியத்திலே சமீபத்தில் ஓர் ஞாயிற்றுக்கிழமை நடந்தேறிய ஓர் தேசிய மகாயாத்திரையின்போது அந்நாட்டிலுள்ள மரியாயின்பிரதான திருசேத்திரங்களிலிருந்து தேவதாயாரின் 26 திருச்சுரூபங்கள் பிறசெல்ஸ்பட்டணத்தையடுத்த கோகெல்பேர்க் நகரிலுள்ள திருஇருதயஆண்டவரின் மகாலயத்துக்கு ஊர்வலமாகக் கொண்டுபோகப்பட்டு விசேஷ வழிபாடுகள் நடைபெறலாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க



# சமாச்சாரம்

### மரியாயின்வருட ஞாபகசுரூபம்

ஸ்கொத்திலாந்தின் மேற்குப் புறத்திலுள்ள ஹெப்றிடெஸ் தீவுகளில் ஹெப்றிடியன் தீவும் ஒன்றாகும். இத்தீவிலுள்ள றுவேவல்ளனு குன்றின்மீது அங்குள்ள சகலதீவுகளின் பேராலும் மரியாயின்வருட ஞாபகார்த்தமாக அத்திலாந்திக் சமுத்திரத்தை நோக்கியவண்ணம் 25அடிஉயரமான தேவமாதாவின் கருங்கல் சுரூபம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. இதனைஸ்தாபிக்க ஏற்படுஞ்செலவு மதிப்பு ஆறுயிரம் பவுண். இந்தச் சுரூபத்திலே பாலகயேசு தேவதாயாரின் வலதுதோளிலே அமர்ந்தவண்ணம் காட்சியளிக்கின்றார். அவருடைய வலதுகரம் ஆசீர்வதிக்கும் பாவனையாயிருக்க, இடதுகரம் மாதாவின்சிரமேல் இருக்கின்றது. அத்திலாந்திக் சமுத்திரத்திற்கு மேலாகத்தோற்றும் இச்சுரூபததைச்சமுத்திரத்திலே அதிகதூரத்தில் செல்லுங்கப்பல்கள் காணக்கூடியனவாகும்.

### கத்தோலிக்க மாணவர்விடுதி

வெளிநாடுகளிலிருந்து செல்லும் கத்தோலிக்க மாணவருக்கென லண்டன் நகரிலேநிரந்தரமானவிடுதிஒன்று இவ்வருடமுடிவிற்குள் திறக்கப்படவிருக்கிறது. இதற்கென ஏறக்குறைய இருபதுஅறைகளுடன் கூடிய ஓர் பெரியஇல்லத்தை வாங்குதற்கென்று கருதினல் கிறிவ்வின் ஆண்டவர் பணம் உதவியிருக்கின்றார். தற்போது அதன்கட்டிடத்தில் சில மாற்றங்களும், அலங்கார வேலைப்பாடுகளும் நடைபெறுகின்றன. வெளிநாடுகளிலிருந்து அங்கு செல்லும் மாணவர்களிலிருந்து கத்தோலிக்க மாணவர்களைப் பிரித்து வைப்பது இந்த விடுதியின் நோக்கமன்று. ஆனல், இங்கிலாந்தின் கத்தோலிக்க வாழ்க்கையுடன் அவர்களைப் பரிசயப்படுத்தி வைப்பதேயாகும். உலகின் சகல பகுதிகளிலுமிருந்து சென்ற மாணவர்களாய்த் தற்போது பெரியபிரித்தானியிலே 20,000மாணவர்கள்வரை இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்களில் சுமார் 3,000 மாணவர்கள் கத்தோலிக்கராவர்.

### கம்யூனிஸ்தர்களின் தோல்வி

திருவாங்கூர்-கொச்சி இராச்சியத்திலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் தொண்டாற்றிவருகின்ற பிறதேசகன்னியாஸ்திரிமாரை அவற்றிலிருந்து விலக்கிவிடுமாறு அங்கு கம்யூனிஸ்தர்கள் எடுத்தமுயற்சி தோல்வியில் முடியலாயிற்று. அத்தகைய ஓர் நடவடிக்கை எடுக்குங்கருத்து அரசாங்கத்துக்கு இல்லையென்று திருவாங்கூர்-கொச்சி இராச்சிய முஸ்லீம் சுகாதாரமந்திரியார் பகிரங்கமாக அறிவித்துவிடலாயினர். இந்தக் கன்னியாஸ்திரிமார் கிறீஸ்தவர்கள் அல்லாத நோயாளரைக் கிறீஸ்துசமயத்துக்கு மனந்திருப்ப முயற்சிக்கிறார்களென்றும், கம்யூனிஸ்தசார்புள்ள நோயாளர்கள்மட்டிலே பட்சபாதம் காண்பிக்கிறார்களென்றும் கம்யூனிஸ்தர்கள் குற்றம் பாரித்தார்கள். கன்னியாஸ்திரிமார் தாங்கள் பராமரிக்கும் நோயாளர்களை அரசியல், சாகிய, சமய, சமூக பேதம்பாராது தங்கள் மனுமுறைக்குரியதொண்டை ஆற்றிவருகிறார்களென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டதென்று மந்திரியார் அவர்களுக்குப் பதில்அளித்தார்.

### அர்ச்சியசிட்டரால் நியமனம்பெற்றவர்

அயர்லாந்திலே கில்லாலோ நகரின் மேற்றிராணியாரான 95வயதுடைய பொகாட்ரி ஆண்டவர் இம்மாசம் 4-ந்திகதியன்று தமது மேற்றிராணித்துவ அபிஷேக 50-ம்வருட தங்கயூபிலியைக் கண்டு களிக்கலாயினர். அர்ச். பத்தாம் பத்திநாதரால் நியமனஞ்செய்யப்பெற்ற ஐரிஷ்காரரான அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களில் இன்னமும் சீவந்தராயிருப்பவர் இவர்ஒருவரே. அர்ச். பத்தாம் பத்திநாதரால் கையெழுத்திடப்பெற்ற அவரதுபிரதிமைப்படம் ஒன்றை இவர் இன்றைக்கும் பூச்சியமாக வைத்திருக்கின்றார். இவர் மேற்றிராணித்துவ அபிஷேகம் செய்யப்பெற்றபின் 1907-ம் ஆண்டு ரோமாபுரிசென்று முதன்முதலாக அவரின் பேட்டிபெற்றபோதே இந்தப் பிரதிமைப்படம் இவருக்குச் சங்மானிக்கப்படலாயிற்று. அந்தப்பேட்டியை இன்றுமேஇவர் ஞாபகத்தில் கொண்டிருக்கிறார். “பத்தாம்பத்திநாதர் வழமைக்கு மாறான விசேஷ பக்தியும், பண்பாடுமுடைய ஓர்மனிதராயிருக்கக்கண்டோம்; அவர் ஓர் அர்ச்சியசிட்டராய் இருப்பாரென நாம்அறிந்துகொண்டோம்” என இவர் கூறுகின்றார்.

### சகோதர கத்தோலிக்க சிற்பிகள்

இங்கிலாந்திலே லிவர்ப்பூல் நகரில் இருஆசனக்கோவில்கள் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன. அவற்றில்ஒன்று அங்கிலிக்கன்சபை ஆசனக்கோவில். மற்றது, கத்தோலிக்க ஆசனக்கோவில். இரண்டையும் சேர் ஜிலெஸ் ஜில்பேட் ஸ்கொட், திரு. அதிரியான் ஜில்பேட் ஸ்கொட்என்ற கத்தோலிக்க சிற்பிகளான சகோதரர்இருவரே கட்டியெழுப்பி வருகின்றார்கள். அங்கிலிக்கன்சபை ஆசனக்கோவிலில் ஈடுபட்டுள்ள சேர் ஜிலெஸ்அவர்கள் இற்றைக்கு 50 வருடங்களின்முன் தமது 22-ம்வயதிலே அதன்சிற்பியாக நியமனம் பெற்றார். கத்தோலிக்க ஆசனக்கோவிலின் சிற்பியாக நியமனம்பெற்றவர் ஓர் புரொட்டஸ்தாந்தரான சேர் எட்வின் லுட்யென்ஸ்அவர்கள். இவர் காலஞ்சென்றமையாலே அவர்நிர்மாணித்தபடி திரு. அதிரியான் அவர்கள் திருப்பணியைத் தொடர்ந்துநடத்தி வருகின்றார். ஆரம்பத்தில் கத்தோலிக்க ஆசனக்கோவிலின் சிற்பியாக ஓர் புரொட்டஸ்தாந்தரும், புரொட்டஸ்தாந்த ஆசனக்கோவிலின் சிற்பியாக ஓர் கத்தோலிக்கரும் நியமனம் பெற்றதையிட்டுப் பலரும் அதிசயிக்கலாயினர்.

### பேர்னதேத்தின் கானம்

திரு. எம். ஆர். எயிற்றன் முன்னர் பிரித்தானிய கடற்படையில் ஓர்மாலுமியாய் இருந்தவர். அங்கிளிக்கன் புரொட்டஸ்தாந்த சபையைச்சேர்ந்தவர். இவர் ஓர்நாள் சாயந்தரம் படக்காட்சி பார்க்கச்சென்று “பெர்னதேத்தின் கானம்” என்ற படத்தைப்பார்த்தார். அதன்விளைவாக இவர் வருடக்கணக்கிலே தான் சேகரித்துவைத்திருந்த 300 பவுணையும் செலவிட்டு ஒன்பதுஅனாதை பெண்பிள்ளைகளை லூர்துதிருப்பதிக்கு யாத்திரையாக அழைத்துச்சென்று திரும்பியிருக்கிறார். இவர் ஓர்முறை “பெர்னதேத்தின்கானம்” எனும் புத்தகத்தைப் படித்தார். அதிலே சொல்லியபடிதான் லூர்துதிருப்பதி இருக்கிறதோஎன்பதைக் கண்டுகொள்ளுமாறு 1948-ம் ஆண்டு அப்பதிசென்றார். அங்கே அத்துணைபெரும் மனவருட்சிஏற்பட்ட காரணமாக, ஓர்கோஷ்டி அனாதர்களுடன் திரும்ப அங்குவருவதாக அத்திருசேத்திரத்திலேயே மாதாவுக்கு வாக்குப்பண்ணினார். கடந்த ஆறுவருடங்களிலும் தனதுஉழைப்பில் கடுமையாக மிச்சம்பிடித்தார். கடைசியாக இவ்வருடம் தான்வாக்களித்தபடி அங்குபோகத் தீர்மானித்தார். அத்தோடுஇது மரியாயின் வருடமென்றும், தேவமாதாவுடனும், பெர்னதேத்துடனும் தொடர்புபூண்டதென்றும் அறியவந்ததும் இங்கிலாந்திலே போட்ஸ்மத்நகரிலுள்ள அர்ச். மரியாயின் கன்னிகாமடஞ்சென்று, ஒன்பது அனாதைபிள்ளைகளைப்பெற்று, யாத்திரையின்போது அவர்களைப்பராமரிப்பதற்கென்று இருகன்னியாஸ்திரீமாரையும் ஒழுங்குசெய்து, வெஸ்ற்மினிஸ்றரின் கத்தோலிக்க இளைஞர்சங்க யாத்திரையுடன் தனது யாத்திரையை நடத்தியிருக்கின்றார்.

### பிரமாண்டமான ஆசனக்கோவில்

தென்னமெரிக்காவிலே கலம்பியாநாட்டு அந்தீஸ்மலையிலே இன்றையஉலகில் மகாவிசித்திரமானதாய், உலகின்மகாப்பெரிய ஆசனக்கோவில்களில் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. முற்றாகஉப்புப்பாரிலிருந்து செதுக்கி அமைக்கப்பட்டுவரும் இந்தஆசனக்கோவில் பரீஸ்நகரிலுள்ள நோட்றேடாம்ஆசனக்கோவிலிலும் பாரியது. அந்நாட்டின் தலைப்பட்டணமாகிய பொகொட்ராநகருக்கு வடக்கே 40மைல் தூரத்திலுள்ள புராதனசிப்பாக்குய்ரு உப்புச்சுரங்கங்களிலே மிகஆழத்தில், 53,000 சதுர அடி விஸ்தீரணமான நிலத்தில் இதுஅமைக்கப்படுகின்றது. இதன் சிறகுமண்டபங்கள் இரண்டும 40 அடிநீளமான அதன் நடுப்பகுதியிலிருந்து 13 பாரிய உப்புப்பார்த் தூண்களால் பிரிக்கப்பட்டுள்ளன. பெரிய பலிபீடமானது 10தொன் நிறைகொண்ட பாரிய உப்புப்பார்க்கண்டத்திலிருந்து பொளிந்தெடுத்த சிலுவைஒன்றைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றும் 15அடிஉயரமான பக்கப் பலிபீடங்கள்பத்தும் சுவர்களுள் பொழிந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தஆசனக்கோவில் பூர்த்தியடைய இன்னும் ஒருவருடம் செல்லுமென்று அதனைநிர்மாணித்த சிற்பிநம்புகிறார்.

### லூர்துபதித் திருயாத்திரைகள்

நிகழும் மரியாயின் புனிதவருடத்திலே சமுத்திர அலைகள் போன்று லூர்துதிருப்பதியில் போய்ச்சரிகின்ற யாத்திரைகளோ முன்னில்லாத அத்துணை பெருந்தொகையாகும். சென்ற ஆவணிமாதத்தில் ஒருநாள்மாத்திரம் 25,000 யாத்திரிகர்கள் அத்திருப்பதிவிடுதிகளில் எள்ளிடவிடமின்றித் தேங்கியிருந்தார்கள். வேறு 40,000யாத்திரிகர்கள் மாதாவின் ஆரோபணத் திருநாளன்றுபோய் அப்பதி முழுவதும் நிறைந்துபோயிருந்தார்கள். பெருமழை பெய்துகொண்டிருந்தபோதிலும் இவர்கள் தங்கள்பக்திமுயற்சிகளைக் குறைவின்றி நடத்தினர்கள். பிரான்ஸ்தேசம் முழுவதிலுமுள்ள கைத்தொழிற்பகுதிகளிலிருந்துபோன பெரும்யாத்திரைக்கோஷ்டிகள் அமெரிக்க ஐக்கியதேசம், கனடா, மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து போன பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களது கோஷ்டிகளுடன் கலந்துகொண்டன. சென்றஆவணிமாத ஆரம்ப முதல் பிரித்தானியிலிருந்தும், அயர்லாந்திலிருந்தும் புகைவண்டித் தொடர்தொடராக யாத்திரிகர்கள் சென்றுகுவிந்தார்கள். பெல்ஜியத்திலிருந்து 18 புகைவண்டித்தொடர்களிலும், ஒல்லாந்திலிருந்து 4 தொடர்களிலும், இத்தாலியிலிருந்து 4 தொடர்களிலும், கொலோன் நகரிலிருந்து 3தொடர்களிலும் போயிருந்தயாத்திரிகர்களின் கோஷ்டிகளும், வடஆபிரிக்காவிலிருந்துபோன யாத்திரிகர் கோஷ்டிகளும், பிரான்சில்வதியும் போலிஷ்மக்களின் யாத்திரைக் கோஷ்டிகளும் அத்திருப்பதியைச் சர்வதேசமயமாக்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாசி மாதம்

போதுக்கருத்து:— கத்தோலிக்க சேவையிலே வாலிபர்கள் எண்ணிக்கையிலும், ஞானத்திலும் முன்னேறும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:— திருச்சபையின் சமூகதர்மக் கொள்கை வேதபோதகநாடுகளில் அதிகமாகப் பரவி நன்கு மதிக்கப்படுவதற்காக மன்றாடிக் கொள்வது.


# சத்தியவேத பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 23-ந் திகதி


## நல்வரவாகுக!

தமிழ்மக்களின் பெருமைவாய்ந்த தலைபிடமாகத்திகழும் நமது யாழ்ப்பாணமும் ஓர் ஐக்கியபாகமாக அமைந்துள்ள ஸ்ரீலங்காவின் பிரதமராய் விளங்கும் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் இம்மாதம் 28-ந் திகதியாகிய வருகிறசெவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யவிருக்கின்றார். எமதுநாடு சுதந்திரமடைவான் அருந்தியாகங்கள்மத்தியில் அயராதுழைத்த பெரியார்களில் ஒருவரும், எமதுநாடு அரிதாகப் பெற்றுக்கொண்ட அரியசுதந்திரம் பறிபோகாது அதிகம்விழிப்பாயிருந்து, அதன் சுபீட்சத்துக்காக உற்சாகத்தோடுழைத்து வருகிறவரும், இந்நாட்டிலுள்ள பெரும்பான்மைச் சமூகத்தினரின் தலைவர்களில்ஒருவருமான சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் பிரதமர்பதவி யேற்றபின் அதிகாரபூர்வமாய் முதன்முறையாக இப்போதுதான் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றார். அதனால் தமிழ்மக்களாகியநாம் நமக்கு இயல்பாய்அமைந்துள்ள பெருங்குணத்தைப் பகிரங்கமாகக் காண்பித்து நம்மத்தியில் அவரைக் குதூகலமாக வரவேற்போமாக!

எமது செல்வநாடு சுதந்திரம்எய்தியபின் ஏலவேஇருபிரதமர்களைக் கண்டுவிட்டது. தேசப்பிதாவென்று பேராக அழைக்சப்படுகிறவரான திரு. டி. எஸ் சேனநாயக அவர்களும், அவரின் பெருந்தகைவாய்ந்த புதல்வர் திரு. டட்லி சேனநாயக அவர்களும இந்நாட்டின் பிரதமர்களாயிருந்து அதன் முன்னேற்றத்துக்காக அருந்தொண்டாற்றியிருக்கின்றனர். அவர்களைத்தொடர்ந்து பிரதமராக வந்த சேர் ஜோண் கொத்தலாவல அவர்களும் தமக்குமுன்னிருந்த பிரதமர்களைப்போலவே நாட்டின்முன்னேற்றத்திற்காக அயராதுழைத்து வருகின்றார். கால்இங்கே, கருத்து அங்கே என்றபான்மையாக நடந்து சுயநாட்டைக் காட்டிக் கொடுக்க முனைந்துநிற்கும் துரோகிகளுக்கெல்லாம் அவர் இடியேறுபோன்று இருந்துவருகின்றார் எமதுநாடு உணவுவிஷயமாய்த் தனது சுயதேவையைப் பூர்த்திசெய்யத்தக்கதாகப் பெருமுயற்சியெடுத்துவருகின்றார். அதன் பொருளாதாரநிலை உயரத்தக்கதாய் ஆனதெல்லாம் செய்துவருகிறார். தாம்பிரதமராகஇருந்த காலத்திலே செல்வச்சிறப்பிலும், நல்வாழ்விலும் நாடு எவ்வளவோதூரம் முன்னேறியதென்ற சரித்திரப்பெருமையை அடைந்துகொள்ளவேண்டுமென்ற ஆர்வம் அவருக்கும் இருக்குந்தானே. ஆனல்,காய்க்கிறமரத்துக்கல்லாது காயாமரத்துக்கும் கல்லெறிவிழுமா? முந்திய இருபிரதமர்களையும் இன்றுதலையில் வைத்து முகமன் பேசுகின்ற எதிர்க்கட்சியினரும், பிறஎதிரிகளும் அன்று அவர்களிலே குறைபிடிக்கவில்லையா? குற்றம் பாரிக்கவில்லையா? அவர்கள் செயலைக் கண்டிக்கவில்லையா? அவர்களின் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சிக்கவில்லையா? ஆதலால் இவர்கள் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்களிலும் குறைபிடிப்பதும், குற்றம் பாரிப்பதும், அவர் செயல்களைக் கண்டிப்பதும், அவரது அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட முயற்சியெடுப்பதும் ஆச்சரியமன்று.

நம்பிரதமர் முந்தியபிரதமர்கள் இருவரினதும் வழிவந்தவரே. அதனல் சிங்கத்துக்குப் பிறந்தது சிறியநரிக்குட்டியாகுமா? இல்லை. அவர் பிரதமராக வந்ததும தமிழர்களிலே மந்திரிமாராகத்தெரிந்து நியமனஞ் செய்த சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களிலும், திரு. எஸ். நடேசன் அவர்களிலும் நாம்யாதுகுறை கண்டோம்? "வல்லவனுக்குவல்லவன் வையகத்தில் உண்டு" என்பதற்கிணங்க, இருதமிழ்மந்திரிமாரும் பெருந்திறமையுடன் தங்கள்பதவிகளை வகித்துத் தமிழ்ச்சமூகத்துக்கும், தமிழுக்கும் ஆற்றுந் தொண்டுகளில் யாதுகுறைகண்டோம்? பிரதமர் அவர்கள் தமிழ்மக்கள்விஷயமாய்ப் பட்சபாதகமாக நடந்துகொள்ளுகிறாரென்று தமிழ்மந்திரிமாராவது, தமிழ்ப்பிரதிநிதிகளாவது இதுவரை முறையீடுசெய்ததுண்டா? ஆகவே, யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்யவிருக்கும் பிரதமரை — அரசாங்க தலைவரைக் கௌரவித்து மனோற்சாகமாக வரவேற்பதே தமிழ்மக்கள்கடனாகும். "வீணே சாதி, சமய, வர்க்கபேதம் பாராட்டி, நாடு பிளவுபடும்வழியில் செல்லற்க" என்றும், "பெரும்பான்மைச் சமூகத்தாரோடு ஒத்துழைப்பதன்மூலமே தமிழ்மக்கள் நன்மைபெறமுடியும்" என்றும் இந்நாட்களிலே தமிழ்ப் பெரியார்கள்இருவர் பகிரங்கமாகக் கூறியிருப்பதையும் நாம்ஈண்டு ஞாபகப்படுத்துகின்றோம். அதனல் பகிஷ்காரம், ஒத்துழையாமையென்றபேச்சே எழப்படாது. இவற்றலே தமிழ்மக்கள் பட்டபாடும், கெட்டகேடும் இம்மட்டும் போதும். இவற்றிலே எந்தக் கட்சி இறங்கினலும் எல்லாம் யாழ்ப்பாணத்தமிழ்மக்கள் தலையிற்றன்பொறியும். தற்போது நமதுமாகாண அதிபராய் இருந்துவருகிறவர் ஓர்தமிழ்ப் பெருமகன் என்பதையும் இந்தவேளை நாம்மறந்துவிடலாகாது. அங்ஙனமாக, பிரதமர் அவர்களுக்கு யாழ்ப்பாணமக்கள் எங்கெங்குமே அமோகவரவேற்பளிக்கப் பெருமித ஆயத்தங்கள் செய்துவருகிறார்களென அறிந்து மகிழ்வெய்துகின்றோம்.

## வேதப்பரப்புதல் ஞாயிறு விண்ணப்பம்

சர்வேசுரனுடையஇராச்சியத்தைப் பரப்பும்வேலை கத்தோலிக்கர் ஒவ்வொருவர்மேலும் சுமந்த ஓர்பாரமான கடமையாகும். அவர்கள் ஞானஸ்நானம்பெற்றுத் திருச்சபையில் சேர்ந்துகொண்டபோதே இது அவர்களின் சீவியநடபடியில் ஓர்பாகமாயிற்று. கிறீஸ்துநாதரின் ஞானச்சரீரத்தைக்குறித்துத் தம்முடைய சாதாரணநிருபத்தில் நமதுபரிசுத்தபிதா 12-ம் பத்திநாதபாப்பரசர் விளக்கிக்காட்டுகிறபடி, மனுஷனய்அவதரித்த தேவசுதன்தாமே சிலுவைமரணத்தினல் மனுக்குலத்தை ஈடேற்றியருளினர். ஆனல், அவரது சிலுவைப்பலியின் பேறுபலன்களாகிய ஞானப்பொக்ஷங்கள் விசுவாசிகளின் அர்ச்சிப்புக்காகப் பகிர்ந்து கொடுக்கப்படும்வேலையில் தமது பரிசுத்தபத்தினியாகிய திருச்சபை தம்மோடு ஒத்துழைக்க வேண்டுமென அவர் சித்தமாய் இருக்கின்றார். இவ்வாறு தாம் சர்வவல்லவராய்இருந்தும் திருச்சபையின்பிள்ளைகளாகிய எமது உதவியையும் அவர்வேண்டிநிற்கின்றார்.

இதுஉள்ளபடியே நாம்போதியளவாக ஓர்போதுமே நியானிக்கமுடியாத மகாப்பெரிய ஓர் பரம இரகசியமாகும். அநேகஆத்துமாக்களின் இரட்சணியமானது, யேசுக்கிறீஸ்துநாதரது ஞானச்சரீரத்தின் செபங்கள், மனப்பொருந்திய தபமுயற்சிகள், தற்பரித்தியாகங்களிலும், அவரது உடன் முயற்சியாளர்கள்போல் இருப்பதாலே மேய்ப்பர்களும், விசுவாசிகளும் நமதுதிவ்வியஇரட்சகருக்கு அருளவேண்டிய ஒத்துழைப்பிலும் தங்கியிருக்கின்றது. பரிசுத்தபிதா தம்முடைய பெரிய சாதாரணநிருபத்தில் எடுத்துக்காட்டியுள்ள முன்சொன்னவசனங்களிலே புதுவேதநாடுகளினதும், சகலஅப்போஸ்தொலிக்க தொண்டுகளினதும் முக்கியநோக்கம் என்னவென்பதைப்பிரத்தியட்சமாகத் தெரிவித்திருக்கின்றார்.

பிறர்சிநேகம்என்பதுசொந்த நாட்டிலேயே தொடங்குகிறது என்பதில் சந்தேகமில்லை. மிகப் பெரியனவென்று அழைக்கப் படத்தகுந்த நமதுசொந்தவேதபோதகநிலையங்களைப் பற்றிச் சாவதானமாய் இருந்தபோதிலும், எங்கள் பிறர்சிநேகம் எங்கள்நாட்டுடன் கட்டுப்படாது பொதுவான தாகவேண்டும். அதனல் விசுவாசப்பரப்புதலுக்கெனச் செய்யப்படும் வருடாந்த விண்ணப்பத்தை ஊக்கமாகவும் உதாரமாகவும் ஆதரிப்பதாலே நமதுசொந்நாட்டின் தேவைகளுக்கப்பாலும் தங்கள்கரிசனை விசாலிக்கச்செய்யவேண்டுமென நமதுவிசுவாசிகளைத் தூண்டிவிடுகின்றோம். குருமாரும், சந்நியாசர் கன்னியாஸ்திரீமாரும், விசுவாசிகளுமாகிய நமது கத்தோலிக்க சனசமூகமுழுவதும் விசேஷமாகத் தங்களைப்பரித்தியாகஞ்செய்து உதாரமாக அளிக்கும் தர்மங்களால் நிருபிக்கப்படும் தங்கள்பற்றுதலைக் கொண்டு கிறீஸ்துநாதரில் தங்களுக்குள்ள பத்திபற்றுதலை மெய்ப்பித்துக் காட்டவேண்டும்.

வேதபோதகர்கள் அதிகம் இக்காலசாதனங்களையும் உபயோகித்துச் சனங்களுடன் தொடர்புஏற்படுத்த வேண்டியவர்கள்என்பதை நாம் அறிவோம். நமதுசொந்தநாட்டிலே தானும் கிறீஸ்துவேதம் ஒருகாலுமேபோதிக்கப்படாதபகுதிகளில் அத்துணை அநேகமான வேதபோதக நிலையங்கள் திறக்கப்படவேண்டியிருப்பதையும் நாம் அறிவோம். கோவில்கள் கட்டப்படவேண்டியிருக்கின்றன. மறுகோவில்கள் விசாலமாக்கவும, பழுதுபார்க்கவும்படவேண்டியிருக்கின்றன. குருத்துவத்துக்கும், சந்நியாசஅந்தஸ்துக்குமான தேவஅழைத்தல்கள் போஷித்து விருத்தியாக்கப்பட வேண்டியிருக்கின்றன. இதற்கெல்லாம் பொருளுதவி அவசியம்வேண்டும். ஆதலால், நமது ஆளுகையின் கீழுள்ள ஆண்கள், பெண்கள், பிள்ளைகள்ஒவ்வொருவரும் நமது விண்ணப்பத்துக்கு இசைந்து பூமியிலே தேவனுடைய இராச்சியத்தைப் பரப்புவதாகிய மகத்தானதொண்டில் ஊக்கமாகஈடுபடுவார்களாக!

(நமதுமேற்றிராணியாண்டவரின் நிருபம் ஒன்றிலிருந்து அனுமதிக்கப்பட்டது)

## சுதேச வர்த்தமானம்

### ஹக்மனைத் தேர்தல் அப்பீல்

கைத்தொழில்மந்திரியாரின் பாராளுமன்றக் காரியதரிசியும், பாராளுமன்றத்திலே ஹக்மனைத்தொகுதிப் பிரதிநிதியுமான திரு. சி. ஏ. தர்மபாலா அவர்களின் தேர்தலை ஆட்சேபித்து நாந்தேனியாவைச்சேர்ந்த திரு. எம். ஜே. அபயவர்த்தன என்பவர் சுப்பிறீங்கோட்டுக்கு ஓர்மனு சமர்ப்பித்தார். சங். சுவான்நீதியரசர் நெடுநாள்விசாரணையின்பின் இந்தமனுவைத் தள்ளிவிடலாயினர். என்றாலும் திரு. அபயவர்த்தன விட்டுக்கொடுக்க மனமற்றவராய் அவரதுதீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல் செய்தார். இந்தஅப்பீலையும் மூன்று நீதியரசர்கள்சேர்ந்து விசாரணைசெய்து செலவுதொகையுடன் தள்ளிவிட்டிருக்கின்றனர். இந்தத்தீர்ப்புச் சென்றதிங்கட்கிழமை சொல்லப்பட்டது.

### செனற்றர் எஸ். பராசசிங்கம்

மானிப்பாய் ஞாபகார்த்த ஆங்கில கலாசாலையிலே மானிப்பாயைச் சேர்ந்தவரான செனற்றர் எஸ். பராசசிங்கம்அவர்களுக்கு மானிப்பாய்வாசிகளால் சென்ற 20 ந்திகதியன்று ஓர் பரிமளிப்பானவரவேற்பு அளிக்கப்படலாயிற்று. அதற்குத் திரு வீ. வீரசிங்கம், எம். பி. அவர்கள் தலைமைவகித்துப் பேசியபோது: செனற்றர் அவர்கள் மானிப்பாய்க்கு ஆற்றியுள்ள சேவைகளும், இந்நாட்டின் வர்த்தக-கைத்தொழிற் துறைகளில் அவர்சிறப்பாக ஈடுபட்டிருப்பதும், அரசியற்துறையில் அவருக்குள்ளஆற்றலும் தமதுஉள்ளத்தைக் கவர்ந்தமையால் பிரதமர் அவரைச் செனற்றராக நியமித்தாரெனக் கூறிநின்றார். அவ்வேளை புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிகூறி அளித்த பதிலில் "பெரும்பான்மைச் சமூகத்தாரோடு ஒத்துழைப்பதன்மூலமே தமிழ்மக்கள் நன்மைபெற முடியும்" என்றார்.

### லைசென்ஸ் அவசியமில்லை

கருப்பட்டி செய்வதற்காகப் பனை, கித்துல், தென்னைமரங்களிலிருந்து பதநீர் இறக்க யாதொரு லைசென்ஸும் அவசியமில்லையென்று உள்நாட்டுமந்திரியார் திரு. எ. இரத்நாயகா அவர்கள் சனப்பிரதிநிதிகள்சபைக் கூட்டத்திலே சென்றசெவ்வாய்க்கிழமை கூறியிருக்கின்றார்.

### அரசாங்க சேவையிலுள்ள இந்தியர்

இலங்கை அரசாங்கத்தின்கீழ் 3,090 இந்தியர்களும், ஒரு பாகிஸ்தானியரும் சேவைசெய்து வருகிறார்களென்றும்; இவர்களின்சேவை அவசியமென்று காணப்படுகிறவரையிலே இவர்கள் நிரந்தரமாகத் தத்தம் பதவிகளில் அமர்த்தப்படுவார்களென்றும் சென்ற செவ்வாய்க்கிழமைகூடிய பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள்சபையில் பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவல அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

### கம்பெனிக்குக் காணி

தனிப்பட்டவர்களுக்கும் நெற்செய்கையில் உற்சாகமளிக்கும் நோக்கமாகக் கல்லோயாப் பள்ளத்தாக்கிலுள்ள சுமார்ஆயிரம்ஏக்கர் நெற்காணி அரசாங்கத்தால் பொதுமக்களின் கம்பெனிஒன்றுக்கு வழங்கப்படவிருக்கிறது. வழங்கப்படுங்காணியைப் பாவியாமல் ஒருபோதும் வைத்திருக்கப்படாதென்ற நிபந்தனையின்பேரில்தான் இக்காணி வழங்கப்படுகிறது. இம்மாதம் 1-ந் திகதி ஐஞ்ஞூறு ஏக்கர் காணியைக் கம்பெனி பாரமெடுத்திருக்கின்றது.

### சீமேந்துத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், தென்மராட்சி, ஊர்காவற்றுறை முதலாம் பகுதிகளிலே சீமெந்துத்தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன் அதன்விலையும் ஏற்றமடைந்துள்ளது. வழமையில் 7 ரூபா 20 சதம், 7 ரூபா 25 சதமாக விலைப்பட்டுவந்த சீமெந்துப்பைக்கெற் தற்போது 8 ரூபா 50 சதம், 9 ரூபா 50 சதமாக விலைப்படுகின்றது. என்றாலும் இந்தவிலைகளுக்கும் கிடைப்பது அரிதாயிருக்கிறது. அதனால் அரசாங்க நிதிவருட இறுதிமாதமாகிய இம்மாதமுடிவிற்குள் பாரங்கொடுபடவேண்டிய எத்தனையோ பகிரங்கவேலைகள் தடைப்பட்டுள்ளன.

### தேயிலை ஏற்றுமதி

உலகமுழுவதுமே தேநீர்ப்பாவனை அதிகரித்துக்கொண்டு வருகிறது. அதனால் தேயிலைக் குள்ளதேவையும் அதிகரிக்கின்றது. சென்ற ஆவணிமாதத்திற்போன்று இலங்கையிலிருந்து முன்னர் எந்தஒருமாதத்திலாவது அவ்வளவுபெருந்தொகையானதேயிலை ஏற்றுமதிசெய்யப்படவில்லை. ரேகுப்பகுதிக்கணக்கின்படி சென்றமாதம் இலங்கையிலிருந்து 3 கோடியே 70 லட்சம் ரூத்தல்தேயிலை ஏற்றுமதியாயிற்று சென்றஆவணிமாத முடிவுவரையுள்ள இவ்வாண்டின் முதலஎட்டுமாதங்களிலும் ஏற்றுமதியானதேயிலை 76 கோடி ரூத்தலாகும்.

### மூன்றும்வகுப்புச் சலார்

மூன்றாம்வகுப்புப் புகையிரதச்சலார் மைல் ஒன்றுக்கு அரைச்சதவீதம் குறைக்கப்பட வேண்டுமெனப் போக்குவரத்து மந்திரியாரான மேஜர்மொண்ரேகு ஜயவிக்கிரமஅவர்கள் விரும்புகின்றார். இதுவிஷயம் தற்போது நிதிமந்திரியாரின் ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மைல்ஒன்றுக்கு அரைச்சதவீதம்குறைப்பது இலங்கை முழுவதுக்குமேசெல்வதாகும். அடுத்தமாதமுதல் மாதந்தோறும் இரண்டுவீதம் வரவிருக்கும் பதினேழுடீசல் மின்சார எஞ்சின்களும் வந்துசேர்ந்ததும் புகையிரதப் போக்குவரத்தில் அநேகதிருத்தங்கள் செய்யப்படவிருக்கின்றன.



# பல தேசங்களில்

### ருஷிய சலவாயுக் குண்டுகள்

சோவியற்ருஷியா தன்னிடமிருக்கும சலவாயுக்குண்டுகளைச் சென்ற ஆவணிமாதம் 26-ம், 29-ம் திகதிகளிலே இருபகுதிகளில் வெடித்துப் பரீட்சித்ததென்று இருஜப்பானிய விஞ்ஞானிகள்கூறுகிறார்கள். அமெரிக்கவரசு தனது சலவாயுக்குண்டுகளைப் பிகினிதீவுகளில் போட்டு வெடித்தது. அந்தக்குண்டுகள் கடலில்விழுந்தன. ருஷியகுண்டுகள் தரைமீது இருஇடங்களில்வீசிப் பரீட்சிக்கப்பட்டனவென்று இந்தவிஞ்ஞானிகள் அறிவிக்கிறார்கள். அமெரிக்கவரசு பிகினிதீவுகளில் குண்டுபோட்டபொழுது ரோக்கியோ நகர வானொலி ஆராய்ச்சிச்சாலையில் என்னென்ன திடீர்மாறுதல்கள்தோன்றினவோ, அதேபோன்ற மாறுதல்கள் ருஷியகுண்டுகள் வெடித்தாலும் ஏற்பட்டனவாம். ஆனால், அமெரிக்க குண்டுகள் வெடித்தபொழுது, ஏராளமான ஆபத்து அவற்றின் சாம்பலால் ஏற்பட்டது. ருஷியகுண்டுகள் எங்கேயோ வெடித்தன. அவைகள் மக்களையும், நாடுகளையும் எப்படிப்பாதித்தன என்றவிபரங்கள் தெரியவில்லை.

### 115 வயது இளைஞன்

120 வயதுவரை உயிர்வாழவேண்டுமென்று காலஞ்சென்ற ருஷியசர்வாதிகாரி ஸ்ராலின் ஏதோ வழிவகையெல்லாம் கையாண்டுபார்த்தாராம். எனினும்அவர் அதற்குள்ளாக இறந்துவிட்டார். ஆனால், அப்படிஎதுவும் செய்யாமல் 115 வயதாகியும் இன்னும் இளைஞனாகவே இருக்கிறார் அசாத் முகமது அல்ஜமிஎன்னும் லெபனன் நாட்டு ஆட்டிடையர். இவர் இவ்வருடம் தனது 115-வது பிறந்ததினத்தைக் கொண்டாடினர். இவர் சமீபத்தில் தன்னைப்பரிசோதிக்க எண்ணி ஒரு பிரபலடக்டரிடம் சென்றார். அவ்வைத்தியநிபுணர் இவரைச்சோதித்தபோது, இவரது உடலின் உள்ளுறுப்புகள் யாவும் ஒருஇளைஞனது உள்ளுறுப்புகள்போல இருப்பதைக்கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். அதற்குக்காரணம் அவர் திறந்தவெளியில் வாழ்க்கைநடத்துவதும், பால், அப்பம், பழவகைகள், காய்கறிகள் உண்பதுமேஎன்று அந்த டக்டர் கூறுகின்றார். வெண்தாடியும், கருமையானகண்களுமுடைய அல்ஜமி இதுவரை ஒருகாலமும் மதுபானம் அருந்தியதோ, புகைத்ததோ கிடையாதாம். இவர் நாள்ஒன்றுக்கு எட்டு மணிநேரம் நித்திரைசெய்வார். இவரது தகப்பன் இருமுறை விவாகம் செய்தபின் 132 வயதில் இறந்தார்.

### ஆபாச படப்புத்தகங்கள்

அமெரிக்க ஐக்கியதேசத்தில் பிள்ளைகளுக்கெனப் பிரசுரமாகின்ற "கமிக்ஸ்" புத்தகங்களில்—அதாவது படங்கள்கொண்டு எடுத்துச் சொல்லப்படுகிற விநோதகதைப் புத்தகங்களில் நூற்றுக்கு 85 விகிதத்துக்கும் கம்யூனிஸ்த அபிமானிகளே பணமுதல் விட்டுக் கொடுக்கிறார்களென அத்தேசத்தில் ஓர்காலம் தலையானகம்யூனிஸ்த பெண்ணெனப் பெயரெடுத்திருந்த டக்றர் பெல்லா வி. டொட் எனும்மாது வோர்செஸ்றர் மேற்றிராசனத்தைச்சேர்ந்த கத்தோலிக்க பெண்மணிகள் சங்கத்தின் நான்காவது அயனுந்த மகாநாட்டில் கூடியிருந்த 3,500 பெண்மணிகளுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றாள். இந்தக் "கமிக்ஸ்" புத்தகங்களில் கம்யூனிஸ்தர்கள் அத்துணைபெரும் கரிசனையெடுத்து வருவதெல்லாம் [illegible] கல்வி நூல்[illegible]

தடுத்து அவர்கள்புலனை மறுபக்கமாகத் திருப்புதற்கென்று செய்யப்பட்டுள்ள ஓர்சூழ்ச்சித்திட்டத்தின் ஓர்பகுதியாகுமென அம்மாது கூறியிருக்கின்றாள். சன்மார்க்கக்கெடுதிகளை உண்டுபண்ணுவனவும், துன்மார்க்க சார்புடையனவுமான ஆபாசபுத்தகங்களையே பிள்ளைகள்வாசிக்கவேண்டுமெனக் கம்யூனிஸ்தர்கள் ஆசிப்பதாகவும், அவர்கள் பலாத்காரத்துக்கும், தீமைக்கும் சார்பானவைகளாகச் சிறார்களின் மனங்கள் கவரப்பட வேண்டுமென்பதையே மேலாகக் கொள்வதாகவும் அவள் மேல் குற்றம்பாரித்திருக்கிறாள்.

### பறக்குந்தட்டுகளின் இரகசியம்

"பறக்குந்தட்டுகள்" விஷயமாய்ப் பெரும்நூதனம்ஒன்றுமில்லை; புராதன ரோமர்கள் இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன்னரே அவற்றைக் கண்டிருக்கிறார்கள் என்று வத்திக்கானில் மூன்றுமாதங்களுக்கு ஒருமுறைபிரசுரமாகும் "லற்றினிற்றாஸ்" எனும் லத்தீன்சஞ்சிகையில் வெளிவந்துள்ள கட்டுரை ஒன்றில் எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது. ரோமர்கள்அவற்றைப் "பறக்குங் கவசங்கள்"என அழைத்துவந்தார்கள். இந்தக்கட்டுரையைஎழுதிய ஜாக்கு வெஸ்விலெற்றாஎனப்பெயரிய பிறெஞ்ச் லத்தீன்பண்டிதர் தாம்கூறியதற்கு ஆதாரமாகப் பிளினி, செனக்காஎன்பவர்கள் எழுதியநூல்களிலிருந்து மேற்கோள் எடுத்துக்காட்டியிருக்கின்றார். அவர்களில் பிளினிஎன்பவர் தாம் எழுதிய "இயற்கைச்சரித்திரம்" எனும்நூலில் பறக்குந் தட்டுகளின் தோற்றத்தைக் குறிப்பிட்டிருக்கின்றார். ஆகாயவெளியினூடாக அசைந்து அசைந்துசெல்கின்ற "பளீரிடும்பரிசைகள்"எனச் செனக்கா கூறியிருக்கின்றார்.

### கம்யூனிஸ்த புத்தகவிலக்கு

பொய், ஆபாசம் ஆகியனநிறைந்த கம்யூனிஸ்தபிரசுரங்களாகிய புத்தகங்களை இந்தியபுகையிரத ஸ்தானங்களிலுள்ள புத்தகக்கடைகளில் விற்கப்படாதென்று உத்தரவுபிறப்பிக்கப்பட்டிருப்பதாக இந்தியஉள்நாட்டு மந்திரியாரான திரு. கைலாஸ்நாத் கட்ஜு அவர்கள் சென்ற 16-ந்திகதி புதுடில்லி மக்கள்சபையில் அறிவித்திருக்கின்றார். இந்தியஅரசாங்கம் விதித்துள்ள இத்தடையையிட்டு அச்சபையிலுள்ள கம்யூனிஸ்த, சோஷலிஸ்த அங்கத்தவர்கள் கேள்விமாரி பொழிந்தார்கள். அதற்குமந்திரியார்: "ஐந்துரூபா பெறுமதியுள்ளபுத்தகங்கள் ஐந்துஅணவுக்கு விற்கப்பட்டதும் எனக்கே சந்தேகமுண்டாயிற்று"என்று பதிலளித்தார்.

---

● திருச்சபையின் ஆரம்பத்திலே ரோமைச்சக்கிரவர்த்திகளால் கிறீஸ்தவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுவந்த காலத்தில் நிகழ்ந்தசம்பவங்களை ஆதாரமாகக்கொண்டு கருதினல் வைஸ்மன் ஆண்டவர் எழுதிய "பபியோலா" என்றகதை திரைப்படத்தில் வெளிவந்திருக்கிறது. இப்படம் புதுவையிலே இம்மாதம் 24-ந் திகதிமுதல் மூன்று நாள்வரை காண்பிக்கப்படவிருக்கிறது.

● சென்னை வை. எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரியில் ராஜாஜி அவர்கள் பேசியபோது: "சரித்திரத்தை அழித்துவிடமுடியாது; அவ்வாறு செய்வதும் புத்திசாலித்தனமன்று; தீவிரவாதிகள் என்ன செய்தபோதிலும் வருங்காலத்திலும் கல்லூரியில் ஆங்கில [illegible] தற்போதய அந்தஸ்தை [illegible]வகித்திருக்கும்"எனக் கூறலாயினர்.

## To Principals of Schools

**PRIME MINISTER'S VISIT TO JAFFNA**

The Principals of Schools are kindly requested to participate in the celebrations connected with the Prime Minister's visit to Jaffna in accordance with the instructions contained in the circulars sent by the Education Officer, N.P., Jaffna, and the D.R.O's of the respective Divisions.

**T. A. J. Mathuranayagam,**
Gen. Manager of R.C. Schools.
Jaffna, 23-9-54.

### தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

**பிரதமரின் விஜயம்**

வடமாகாண வித்தியாதிகாரியவர்களும், உங்கள்பிரிவின் காரியாதிகாரியவர்களும் பிரதமரின் விஜயத்தைப் பற்றி அனுப்பியிருக்கும் அறிவித்தலின்படி ஆசிரியர்களும், பிள்ளைகளும் பங்குபற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

**T. A. J. Mathuranayagam,**
Gen. Manager, R. C. Schools.
Jaffna, 23-9-54.

## ஆசிரியருக்கு

**பனை மகோற்சவம்**

ஐயா, காங்கேசன்துறையிலிருந்து சிமெந்து ஏற்றுமதியாகுமென்று இற்றைக்குப் பத்து வருடங்களுக்குமுன் நாம் எதிர்பார்க்கவில்லை. அஃதேபோன்று இன்னும் பத்துவருடத்துள் பனையிலிருந்து பெறப்படும் சீனி, சர்க்கரை, கல்லக்காரம்முதலானவை நமது நாட்டிலிருந்து ஏற்றுமதியாகுமென்பதை நிச்சயமாக எதிர்பார்த்திருக்கலாம். ஒருபனை நூறுரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தைக் கொடுக்குமென்பதும், ஒருபனந்தோட்டம் அதே அளவான தேயிலைத் தோட்டத்திலும் வருமானம் கூடியதென்பதும் தற்போது நிச்சயமாகக் கண்டறியப்பட்டுவிட்டன. ஆதலின் வசதியான உங்கள் நிலங்களிலெல்லாம் காந்திஜி பிறந்ததினமாகிய 2-10-54 சனிக்கிழமையன்று ஏராளமான பனம்விதைகளை விதைத்து பனை மகோற்சவத்தைக் கொண்டாடி, வருங்காலத்தைச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

அகிலஇலங்கைப் பனம்பொருள் உற்பத்திச் சங்கத்தினர்.

### செவிடரும், ஊமருமான பெண்கள்

"ஸ்ருதெயேட்" எனும்கப்பல் சென்றவாரம் ஒருநாள் கொழும்புத்துறைமுகத்தில் தங்கிநின்றபோது அதிலிருந்து இருவிசித்திரபிரயாணிகளும் கரையில்இறங்கிக் கொழும்புநகரைப் பார்வையிட்டு, ஏராளமான பிரதிமைப் படங்கள் பிடித்துக்கொண்டு திரும்பவும் கப்பல்சென்றார்கள். ஆனால், இவர்கள் எவரோடேனும் பேசியதே கிடையாது. செல்வி ஒல்கா ஷோ, செல்வி கோர்பெற்எனும் இவ்விரு பெண்களும் ஊமைகளும், செவிடர்களுமாவர். ஆனால், இருவரும் தங்களுள் குறிப்பாஷைமூலம் பேசிக்கொண்டார்கள். தாங்கள்பிடித்த பிரதிமைப்படங்களைக்கொண்டு கொழும்புநகரைப்பற்றித் தங்கள் நண்பர்களுக்கு எடுத்துக்கூறவிருக்கிறார்கள். இவர்களில் மூந்தியமாது ஆஸ்திறேலியாவிலிருந்து லண்டனிலுள்ள ஊமர் செவிடர் பாடசாலைஒன்றின் ஆசிரியையாகச் செல்லுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணா சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

நீங்கள் பாடசாலையில் முதற் படிப்பது ஞானோபதேசம். வேதஅறிவு எவ்வளவு உண்டோ வேதஅனுசாரமும் அதற் கேற்றதாய் இருக்கும்.

நம் வேதத்தைச் சரியாய் அனுசரிப்பதுதான் இரட்சணிய வழி. அதாவது நித்திய பாக்கியமோ, நித்திய கவலையோ எமது வேதஅறிவின் நிறைவிலோ, குறைவிலோ தங்கி யிருக்கிறது. ஆகையால்தான் மரியாயின் சமாகமத்தை முன்னிட்டு ஞானோபதேசப் பொருட்காட்சி நடக்க விருக்கிறது.

இதில் விசுவாச சத்தியங்களும், அவைகளின்படி நடக்கும் விதமும், சித்திரங்கள் மூலம் விளக்கப்படும். ஒரு வகையிலே அவைகள் உயிர்பெறும். உங்கள் கவனத்தைக் கவரும். மனதில் பதியும். இதனால் ஞானோபதேசத்தை நன்றாய்க் கற்றுக் கொள்வீர்கள்.

அது மாத்திர மல்ல, மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவும் திறமாய் அறிவீர்கள். இக்காட்சியினால் நீங்களும், உங்கள் ஆசிரியரும் நிரம்பிய பலன் அடையலாம். சுபம்!

உங்கள் அன்புள்ள அண்ணா

## தோத்திரிப்போம்

: 'ஜெயம்' :

I

பாலயேசு தாய்மரியைத் தோத்திரிப்போமே—சென்ம
பாவமற்ற தூயவளைத் தோத்திரிப்போமே
நீலவான நாயகியைத் தோத்திரிப்போமே—பொங்கும்
நேசவாஞ்சை யோடுநாளும் தோத்திரிப்போமே

II

சாவழித் துயிர்த்ததாயைத் தோத்திரிப்போமே—பேயின்
சத்துவம் அழித்ததாயைத் தோத்திரிப்போமே
பாவியை அணைக்கும்தாயைத் தோத்திரிப்போமே—திங்கள்
பாதமே மிதித்ததாயைத் தோத்திரிப்போமே

III

மாதவன் மணந்ததாயைத் தோத்திரிப்போமே—அன்பு
மாமலர் சொரிந்துதாயைத் தோத்திரிப்போமே
ஆதவன் அணிந்ததாயைத் தோத்திரிப்போமே—கோடி
அற்புதம் புரிந்ததாயைத் தோத்திரிப்போமே

IV

பூதலம் செழிக்கத்தாயைத் தோத்திரிப்போமே—நல்ல
புண்ணியம் கொழிக்கத்தாயைத் தோத்திரிப்போமே
சோதனை தவிர்க்கத்தாயைத் தோத்திரிப்போமே-என்றும்
சொர்ணதிருத் தாள்பணிந்து தோத்திரிப்போமே

V

உன்னதப் பிதாமகிழத் தோத்திரிப்போமே—ஞான
ஊறணியைப் பூரணியைத் தோத்திரிப்போமே
அன்னைமரி தாய்புனித மான ஆண்டிலே—மைந்தர்
ஆவலோடு ஒன்றுகூடித் தோத்திரிப்போமே.

## சிறுவர்களின் செபம்

ஒரு தகப்பன் தாய்க்கு இரண்டு பிள்ளைகள். மூத்தது பெண்பிள்ளை. பெயர் ஆஞ்சலோ. இளையது ஆண் பிள்ளை. பெயர் அன்ரன். தாயும் பிள்ளைகளும் தேவதாயாரில் மிகவும் பக்தி உள்ளவர்கள். ஆனால், தகப்பன் மூவருக்கும் முழுஎதிர். அநேக வருடங்களாகப் பூசை கண்டறியார். பாவ சங்கீர்த்தனம் செய்தறியார். தாயும், பிள்ளைகளும் அவர் மனந்திரும்பும் படியாக எப்போதுமே தேவமாதாவைப் பார்த்து மன்றாடி வந்தார்கள். ஆனால், அவர் மனந்திரும்பிய பாடில்லை.

அவ்வாறாக, ஓர்முறை கோவில் திருநாள் வந்தது. நவதின விழாக்கள் தொடங்கின. ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் குடும்பம் ஒவ்வோர் விழாவைப் பூசையுடன் கொண்டாடி வந்தது. ஆஞ்சலோவும், அன்ரனும் தகப்பனைப் பார்த்து: "அப்பா! எல்லாக் குடும்பங்களும் நவதின விழா கொண்டாடுகின்றன; நீங்களும் எங்கள் குடும்பத்தின் பெயரால் ஒருவிழாவைக் கொண்டாட வாருங்கள்" என்று அழைத்தார்கள். அதற்குத் தகப்பன்: "திருவிழா கொண்டாடப் பணந்தானே வேண்டும்; நானும் வேண்டுமா?" என்று கேட்டார். அவர்கள்: "நீங்கள் இல்லாது எப்படிக் கொண்டாடுகிறது?" என்று கேட்க, அவர்: "இன்று ஓர் அவசிய கருமம் இருப்பதால் வந்து கொள்ள முடியாது" என்று ஓர்சாக்குச் சொல்லி விட்டு எழுந்து போயினர்.

இவ்வாறாக, மறுநாள் தகப்பன் வீட்டிற்கு வந்து கொண்டு இருந்த போது எதிர்பாராத விதமாகப் பெருமழை பெய்தது. காற்றும், மின்னலும், இடிமுழக்கமும் மிகக் கடுமையாய் இருந்தன. இடியே விழுந்து விடும் போல் இருந்தது. அப்பொழுது அவர் பயந்து நடுநடுங்கி: மாதாவே! உம்முடைய தஞ்சந்தான் என்றார். எவ்வளவோ காலமாய்ச் சொல்லாது விட்ட பிரியதத்த மந்திரத்தைச் சொல்லத் தொடங்கினர். இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக் கொள்ளும் என்ற பகுதியை உரத்துச் சொன்னார். பின்னர் அவ்வேளை ஒதுங்க இடம் கிடையாது போகவே எதிரில்வந்த மாதாகோவிலையே நாடிச் சென்றார். அப்போது அங்கே திருவிழா நடந்து கொண்டு இருந்தது. பிரார்த்தனை முடிந்ததும் அங்கு இருந்த ஒரு பாலியன் ஓர்பாட்டுத் தொடக்கினான். கருங் கல்லையுமே கரைக்கக் கூடிய தேனினும் இனிய குரலில் அவன் பாடினான். அப்போது மழைக்கு ஒதுங்கி அங்கு சென்றவர் அப்பாட்டைக் கேட்டு உள்ளம் உருகியவராய் அப்பாலியனைத் திரும்பிப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! அவன் தனது மகன் அன்ரன் எனக் கண்டதே ஆனந்த வசத்தரானார். திருவிழா முடிந்தது. மழையும் நின்றது. எல்லோரும் கோவிலை விட்டு வெளிகொண்டனர். அவரும் வெளியே சென்று அன்பு பெருகத் தனது மகன் அன்ரனைக் கட்டி அணைத்து முத்தமிட்டு மூவரையும் அழைத்துக் கொண்டு வீடு சென்றார். அவர் கோவிலுக்கு வந்தது எல்லோருக்கும் ஆச்சரியமாய் இருந்தது. அன்று முதல் அவர் மனம் மாறியது. இன்று அவர் ஓர் நல்ல கத்தோலிக்கர்.

## முதலிடம்

ஒரு ஒய்வுநாளில் யேசுவிடம் திமிர் வாதம் பிடித்த ஒருவனைக் கொண்டு வந்தார்கள். புதுமை புரிந்து அம்மனிதனைக் குணமாக்கினால் அவர்மீது ஒய்வுநாளை அனுசரியாதவர் என்ற குற்றஞ் சாட்டலாம் என்று பரிசேயர் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

"உங்களுடைய கழுதை அல்லது மாடு கிணற்றில் விழுந்தால் ஒய்வுநாளைப் பாவாய் பண்ணாமல் அதைத் தூக்கமாட்டீர்களோ? அப்படியானால் ஒருமனிதனைக் காப்பாற்ற ஒய்வுநாளில் புதுமை செய்வதில் உள்ள குற்றம் என்ன?" பரிசேயர் வாய்பொத்திவிட்டார்கள்.

மேலும் பரிசேயருடைய பதவி மோகத்தையும் பிட்டுக் காட்டினார் யேசு. அவர்கள் செபக் கூடத்தில் முதலிடந் தேடுவார்கள். சந்தை சாவடிகளில் தங்களுக்குச் சலாம் போடவேணும் என்று கற்பிப்பார்கள் சனங்களுக்கு.

இவர்கள் சருவேசுரனுக்கு உகப்பானவர்களாக வேணுமென்றால் கடைசி இடத்தைத் தேடவேண்டும்.

உயர்ந்த இடமும், உச்சநிலையும் தலைச் சுழற்சியை உண்டுபண்ணும். தாழ்ந்த இடம் தலை சிறந்தது.

(ஞாயிறுசுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## தூதுசென்ற ஒலிம்பியா

றோமை இராச்சியம் ஓர் அஞ்ஞான நாடாய் இருந்த காலத்தில் அங்குள்ள கிறீஸ்தவர்கள் காட்டு மிருகங்களைப் போல் வேட்டையாடிக் கொல்லப்பட்டு வந்தார்கள் அப்போது ஒருநாள் சாயந்தரவேளை ஒலிம்பியா என்னும் ஒருசிறு பெண்ணும், அவள் தகப்பன் மார்க்குஸும் வீட்டுவாயிற்படியில் உட்கார்ந்து வீதியைப் பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

"அப்பா! அதோ சுவாமி வலென்ரைன் வருகிறார்" என்றாள் சிறுமி. அப்போது சத்தம் இடாதபடி அவளைத் தகப்பன் அமர்த்த வேண்டி யிருந்தது. ஏனெனில், யாராவது அதைக் கேட்டால் சுவாமியைப் பிடித்துக் கொலை செய்வார்கள் என்பது அவனுக்குத் தெரியும். ஒலிம்பியா தான்செய்த தவறுக்காக உடனே மன்னிப்புக் கேட்டாள்.

சுவாமியாரும் அவர்கள் இருந்த வீட்டை அடைந்தார். "உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்றார். அதன்பின் "மார்க்குஸ்! என்னை ஏன் அழைத்தீர்கள்?" என்று கேட்டார். "சுவாமி! கிறீஸ்தவர்களைப் பிடித்து வரும்படி அரசன் சேவகரை அனுப்பியிருக்கிறான்; நீங்கள் உடனேதானே இந்த ஊரை விட்டுப் புறப்பட வேண்டும்; அல்லது கட்டாயம் சேவகர் கையில் அகப்படுவீர்கள்" என்றான் மார்க்குஸ்.

"அருமைச் சிநேகிதா! நீர் காட்டும் அனுதாபத்தை யிட்டு நன்றி கூறுகிறேன்; ஆனால், நானோ இந்தஊரை விட்டுப் போகவேமாட்டேன்; எனது சனங்களுக்கு நான் உதவி செய்ய வேண்டும்" என்றார் குருவானவர்.

இதைக் கேட்டதே இருவரும் கவலை கொண்டனர். அன்று இரவே அவர் பிடிபட்டு மறுநாள் சிறை வைக்கப்பட்டார். பின்னர் நீதிபதி முன்பாகக் கொண்டுபோகப் பட்டார். "வலன்ரைன்! எங்கள் றோமானியதேவர்களை நீ வணங்க வேண்டும்" என்றார் நீதவான்.

"நான் கிறீஸ்தவன்; ஒருபோதும் உங்கள் தெய்வங்களை வணங்கவேமாட்டேன்" என்று விடை பகர்ந்தார் சுவாமியார். அதனால் மரணத்தீர்வை இடப்பட்டார். அவர் சிறையில் இருந்த போது ஒலிம்பியா அவரைச் சந்திக்கப் போனாள். அவர் ஒருகடிதம் எழுதி மார்க்குஸுக்குக் கொடுக்கும்படி அவளிடம் கொடுத்தார். அந்தக் கடிதத்தை மார்க்குஸ் கிறீஸ்தவர்களுக்கு வாசித்துக் காட்டினான். "உங்கள் விசுவாசத்தை இழந்து போகாமல் உறுதியாய் இருங்கள்" என்று அதிலே சுவாமியார் எழுதியிருந்தார். தாம் மரிக்குமுன் எத்தனையோ கடிதங்கள் எழுதி அனுப்பித் தமது கிறீஸ்தவர்களை அவர் திடப் படுத்தினார். அவர்தான் முதலாம் வலன்ரைன் என்று அழைக்கப் படுகிறவர். கி. பி. 270-ம் ஆண்டு மாசி 14-ந்திகதி வேதசாட்சியாய் மரித்தார்.

அவரது கடிதங்களைச் சனங்கள் மறக்கவில்லை. அவரது திருநாளிலே தங்கள் சிநேகிதர்களுக்குக் கடிதம் எழுதி அனுப்பும் வழக்கம் இன்றும் அந்த ஊரவர்களில் இருந்து வருகிறது.

— J. M. J.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை தேடிக் கொடுத்த வான்கோழி

"அம்மா! எட்டுமணி ஆகிவிட்டது; நான் பாடசாலைக்குப் போய் வருகிறேன்; நீங்கள் அப்பாவையிட்டுக் கவலைப்பட வேண்டாம்; அவர் பட்டாளத்தில் சுகமாய் இருப்பாரென நம்புகிறேன்; விரைவிலே அவருடைய கடிதத்தைக் காண்போம்; சந்தோஷமாய் இருங்கள்" என்று கூறிவிட்டுப் பாடசாலைக்குப் புறப்பட்டான் ஜேம்ஸ்.

சிஸ்றர் இன்னும் வகுப்புக்கு வாராததால் மாணவர் தங்களுள் சம்பாஷித்துக் கொண்டு இருந்தனர். ஒவ்வொருவரும் கிறிஸ்மஸ் சந்தோஷமாக ஏதோ ஒரு பொருள் கொண்டுவந்து சிஸ்றருடைய மேசை மேல் வைத்திருந்தனர். அவற்றைக் கண்டதும் ஜேம்ஸுக்குக் கவலை ஏற்பட்டது. தகப்பனுடைய நினைவு வந்தது. அம்மாவிடம் நான் எப்படிக் கேட்பேன்? கேட்டால் அவ கவலைப்படுவா என்று தனக்குள் எண்ணினான்.

அப்போது அவனுக்குப் பின்னால் இருந்தபையன்: "என்னுடைய அம்மா கிறிஸ்மஸ் நாட்களுக்காக வான்கோழி ஒன்று வாங்கி வைத்திருக்கிறா" என்று றோஸ் மேரிக்குச் சொன்னது அவன் காதில் விழுந்தது. உடனே திரும்பிப் பார்த்து: அதன் விலை என்ன? என்று கேட்டான். பதில் கிடைக்க வில்லை. எங்கே வாங்கலாம்? என்று கேட்டான். "லுக்காஸின் இறைச்சிக் கடையில் வாங்கலாம்" என்றாள் றோஸ்மேரி.

உடனே ஜேம்ஸ் ஒரு கடதாசியில் பின்வருமாறு எழுதினான்.

சங். சிஸ்றர் அவர்கட்கு,

கிறிஸ்மஸ் விருந்துக்காக நான் உங்களுக்கு ஓர் வான்கோழி உபகரிக்க விரும்புகிறேன்; அதை என்பெயரால் லுக்காஸின் இறைச்சிக் கடையில் பெற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் பணிவுள்ள
ஜேம்ஸ்

பிறகு சிஸ்றரின் மேசைமேல் அத்துண்டை மடித்து வைத்து விட்டுத் தனது இடத்தில் போய் அமர்ந்தான்.

சிஸ்றர் வகுப்புக்கு வந்த போது மேசை மீது இருந்த சாமான்களையும், கடதாசித் துண்டையும் கண்டா. எடுத்து வாசித்த பின்: "ஜேம்ஸ், அதிகம் திறமான வெகுமதி கொடுத்திருக்கிறீர்" என்றா. இதைக் கேட்டதும் மற்றவர்கள் அதிசயத்துடன் அது என்ன? என்று அவனை அலட்டத் தொடங்கினர்.

வகுப்பு முடிந்ததும் ஜேம்ஸ் நேரே லுக்காஸின் இறைச்சிக் கடை சென்றான். வான்கோழியின் விலையை விசாரித்தான். எட்டு ரூபா என்றனர். பையன் திடுக்கிட்டான். பணத்துக்கு எங்கே போவது? என்னிடம் இரண்டு ரூபா மாத்திரம் உண்டு. பிறகு யோசனையுடன் வீடு சென்றான். அம்மாவையும் காணவில்லை. மேசை மேல் ஒரு கடிதம் எழுதி வைக்கப்பட்டிருந்தது.

"மகனே! அம்மா மாக்ஸ்வெல் என்பவவிடம் போ; அவசகலமும் உனக்கு விபரமாகச் சொல்லுவா; உன் தகப்பனிடம் இருந்து தந்தி வந்தது; நான் வருத்தம் பார்க்கப் போகிறேன்" என்று அதில் எழுதப்பட்டிருந்தது. குறித்த வீட்டைப் போய்ச் சேர்ந்தான் ஜேம்ஸ்.

அம்மா மாக்ஸ்வெல் அவனை ஆற்றித் தேற்றி அன்பாகப் பராமரித்து வந்தாள். அவனுக்கோ பெற்றாரின் கவலை ஒருபுறம்; வான்கோழிக்குப் பணங் கொடுக்க வேண்டுமே என்ற கவலை மறுபுறம். என்ன செய்வான்? சில தினங்களின் பின்னர் திரும்பவும் அந்த இறைச்சிக் கடைக்குச் சென்றான். அங்கே முதலாளியைக் காணவில்லை. பணியாளன் ஒருவன் அவனை வரவேற்றான்.

ஜேம்ஸ் — இங்கு யாராவது வந்து என் பெயரைச் சொல்லி ஒரு வான்கோழி வாங்கினார்களா?

வேலைகாரன் — ஆம் தம்பி, சிஸ்றருக்கு ஒரு வான்கோழி கொடுத்தோம். நீர்தான் அதன் விலையைக் கொடுக்க வேண்டும்.

இதைக் கேட்டதே ஜேம்ஸ் கவலை நிறைந்த முகத்துடன் குனிந்து தரையை நோக்கியபடி நின்றான்.

"தம்பி! ஏதோ கவலையுடன் நிற்கிறீர் போல் இருக்கிறதே; எங்கள் எசமானுக்கும் ஒரு கவலை உண்டு; நீர் உமக்குள்ள கவலையை அவருக்கு எடுத்துச் சொன்னால், அவர் அதைப் போக்கி விடுவார்; ஏனெனில், அவருடைய கடையில் வேலை செய்து வந்த பையன் நேற்று ஓடிவிட்டான்; அவருக்கு உம்மைப் போன்ற ஒரு பையன் தேவை" என்றான் பணியாளன்.

இதைக் கேட்டதும் ஜேம்ஸுக்குத் தென்பு பிறந்தது. முதலாளியைக் காணச் சென்றான். தனது கவலையை அவனுக்கு எடுத்துச் சொன்னான்.

"தம்பி! நீர் வான்கோழிக்குப் பணம் கொடுக்க வேண்டியதில்லை; பெற்றாரையும் நினைத்துக் கவலைப்பட வேண்டியதில்லை; இன்று தொட்டு எனது கடையில் நின்று வேலை செய்து கொண்டு வாரும்; அதுவே உமது கவலையைத் தீர்க்கும்" என்று முதலாளி பட்சமாகக் கூறினார்.

ஜேம்ஸுக்கு உண்டான ஆனந்தம் இம்மட்டென்று சொல்லவும் வேண்டுமா? தனக்குக் கிடைத்த சிறிய அறையில் மெழுகுதிரி ஒன்றைக் கொளுத்தி வைத்து முழந்தாளில் இருந்து தேவனுக்கு நன்றி கூறினான். தனது பெற்றாருக்கும் இந்த நல்ல செய்தியை அறிவித்தான்.

— ஏ. ஜே.

## சரியான விடைகள்

### கணிதப்பகுதி

(1)

| | | |
|---|---|---|
| 10 | 3 | 8 |
| 5 | 7 | 9 |
| 6 | 11 | 4 |

(2) 71

### வசனப்பகுதி

A (1) வாழைப்பழம்
(2) மோதிரவிரல
(3) தொட்டாவாடி (ஓர்பூண்டு)
(4) கண்ணாடி

B (1) மல்லிகை
(2) வேளாங்கண்ணிமாதா
(3) கப்பலேந்திமாதா

C (1) விருத்தசேதனம்

D (1) பையன் அந்தப் பெண்ணின் மகன்
(2) a மரியாயே வாழ்க
b நாட்டைக் காப்பது எம் கடன்

வசனப்பகுதியில் A பிரிவில் தரப்பட்ட நான்குகேள்விகளுக்கும் ஒருவர் மாத்திரம் சரியானவிடை கொடுத்தார். மற்றப்படி இருபகுதிகளுக்கும் A பிரிவு நீங்கலாக சரியான விடைகொடுத்தவர்கள் மூவர் மாத்திரம்.

1. பெர்னதெத் சவிரிமுத்து, மாரீசன்கூடல், இளவாலை.
2. க. ஜெனோவா, தி. கு. [illegible]ியர்மடம், யாழ்ப்பாணம்.
3. எவ். துரைராஜா, க. பாடசாலை, புங்குடுதீவு.

கணிதப்பகுதிக்கு மாத்திரம் சரியானவிடை கொடுத்தவர்கள்:

மக்சிமஸ் சேர்ச்சில் பெர்னண்டோ, 95, அலஸ் றோட். நீர்கொழும்பு

பி. டெனிசியஸ் பர்னாந்து, அர்ச். மரியாயின் பாடசாலை, நீர்கொழும்பு.

பே. இராயப்பு, அர்ச். அந்தோனியார் பாடசாலை, வெற்றிலைக்கேணி.

ஆ. இராசநாயகம, சம்மிக்கேல் சனசமூகநிலையம், உரும்பிராய்

சா. புனிதம், காங்கேசன்துறை.

ஜெ. மே. நேசநாயகம், ஏழாலை.

ஜே. ஸ்ரானிஸ் லாவுஸ் குறேரு, குடாப்பாடு, நீர்கொழும்பு.

வசனப்பகுதியில் தரப்பட்ட A பிரிவின் நான்குகேள்விகளுக்கும் சரியான விடைகொடுத்தவர்:

மாட்டின் மாக்கஸ், த. க. பாடசாலை, நீர்கொழும்பு.

## பொழுது போக்கு



தகப்பன்:— டே, மரியநாயகம்! உன் அம்மாவைப்போலே இப்படியெல்லாம்கொழுத்து என்ன செய்யப் போகிறாய்?

மகன்:— சமையல்தான் செய்யப் போகிறேன் பப்பா.

* * *

தலைமைஆசிரியர்:— (நற்சாட்சிப்பத்திரம்ஒன்றில் கையொப்பமிட்டபின்) இதைவிட உனக்கு நான் செய்ய வேண்டிய உதவிஎன்ன?

மாணவன்:— என் ஊற்றுப்பேனாவைத் திரும்பத் தருவதுதான் சேர்.

* * *

ஆசிரியர்:— (ஓர்பையனைவிழித்து)உன் பெயர் என்ன?

பையன்:— என் பெயர் சுந்தரம்.

ஆசிரியர்:— உனக்கு மரியாதையாய் மறுமொழிசொல்லத் தெரியாதா?

பையன்:— தெரியும்! என்பெயர் சேர் சுந்தரம்.

* * *

கார்ச்சாரதி:— தம்பி! இந்தத் தெருவால் எங்கே போகலாம்?

பையன்:— இதால் எங்கடை வீட்டுக்குப் போகலாம்.

* * *

டக்றர்:— ஏன்தம்பி! நீ எப்போதும் குளிசைமருந்தையே கேட்கிறாய்?

பையன்:— ஆமாம் டக்றர், அதிலே ஒரு விசேஷம் உண்டு. என் விளையாட்டுத் துவக்கினுள் அது சரியாகப் போகுதுங்க!

* * *

காருக்குள் இருந்தவர்:— ஏ சாரதி! சந்திகளில் கார் திரும்பும் போது எனக்குச் சரியான பயம்பாரு; பயமிகுதியால் நான் கண்ணையே மூடிவிடுவேன்; கவனமாய்ச் செலுத்து சாரதி!

சாரதி:— நானும் உங்களைப் போல் தானுங்க. சந்திகளில் கண்ணை மூடிவிட்டுத்தான் திருப்புவேன், பயப்பிட வேண்டாம்.

* * *

ஆசிரியர்:— புகைவண்டியில் மூன்று வகுப்புகள் உண்டு. அவைகள் 1-ம் வகுப்பு, 2-ம் வகுப்பு, 3-ம் வகுப்பு.

மாணவி:— அப்போ சேர், என் அக்கா?

ஆசிரியர்:— ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

மாணவி:— என் அக்கா நாலாம் வகுப்பு அல்லவா? எதிலேஅவபோகிறது?

— இ. மே. யோ. தங்கராசா

## தெரியுமா?

பின்வருஞ் சொற் தொடர்களில் ஓர் மகாசம்பவம் பற்றிய வசனம் ஒன்று அடங்கி யிருக்கிறது. சரி, கண்டு பிடித்து எழுதுங்கள் பார்க்கலாம்.

(1) மரிக்கும் நாளை மனிதன் அறியான். [தானே.
(2) காயாயின் பழுத்து விழும்
(3) சமாதியைக் கண்டு தாய் புலம்பினாள். [றான்.
(4) கமம் செய்யக் கரைச்சி சென்
(5) ஐப்பொருள் அல்ல, கைப்பொருள்.
(6) பசிவந்தால் பத்தும் பறந்திடும்.
(7-8) எட்டுப் பணம் முதல் வேண்டும்.
(9) பத்துப்பத்துப்-பதிற்றுப்பத்து.
(10) வரையின்றி வழங்கிய வள்ளல்.
(11) நடையிலே சென்று நகரை அடைந்தான்.
(12) பெறும் பேறுதான் யாது?

— ஜே. ஏ. ஜீ.

## முல்லைத்தீவுப்பகுதிச் சங்கீதவிழா

முல்லைத்தீவு வட்டாரப் பாடசாலைகளின் சங்கீதவிழா இவ்வட்டார ஆசிரியர் சங்கத்தால் முல்லைத்தீவுவட்டார வித்தியாதரிசி திரு. எம். இராசசுந்தரம் அவர்கள் தலைமையில் முல்லைத்தீவுக் கத்தோலிக்க ஆண்பாடசாலை மண்டபத்தில் 18-9-54 பிற்பகல் 6 மணியளவில் ஆரம்பமாகி 9மணியளவில் முடிவெய்தியது. இவ்விழாவில் கூட்டுப்பாட்டு, நடனம், நடித்தல், கோலாட்டம் என்பன விசேஷஅம்சங்களாக அமைந்திருந்தன. அநேகம் பாடசாலைகள் இதில் கலந்துகொண்டன. இப்போட்டியில் திறமைகாட்டிய முதல்இருபாடசாலைகட்கும் வித்தியாதரிசி அவர்களால் பரிசில்களாக வெள்ளிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன. அவற்றின் விபரம் விருமாறு:

கூட்டுப்பாட்டு: 1-ம் இடம் முல்லைத்தீவு, க. ஆண்பாடசாலை. 2-ம் இடம் தனியூற்று, சி. சி. ஆண்பாடசாலை.

நடனம்: 1-ம் இடம் தனியூற்று, சி. சி. ஆண்பாடசாலை. 2-ம் இடம் முள்ளியவளை, எச். பி. ஆண்பாடசாலை.

நடித்தல்: 1-ம் இடம் வற்றாப்பளை, க. ஆண்பாடசாலை. 2-ம் இடம் முல்லைத்தீவு, க. ஆண்பாடசாலை.

— நிருபர்.

## வற்றாப்பளை பெற்ற பரிசில்

முல்லைத்தீவுப்பகுதி ஆசிரியர்கள் சங்கத்தால் 18-9-54 சனிக்கிழமை நடாத்தப்பெற்ற சங்கீத விழாவிலே வற்றாப்பளைக் கத்தோலிக்க பாடசாலை மாணவர்கள் "உன்சத்துராதியை நேசி" என்னும் மகுடந்தாங்கிய நாடகமொன்றைப் பத்துநிமிடங்களில் நடித்துக்காட்டி, முதற்பரிசிலாக ஓர் வெள்ளிக்கிண்ணத்தைப் பெற்றிருப்பது பாராட்டத்தக்கதே. இப்பாடசாலை கடந்தசிலவருடங்களில் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கின்றது. ஆசிரியர் வ. யோசவ் அருமைநாயகம் அவர்களின் அயராதஉழைப்பு இப்பாடசாலையைப் பலதுறைகளிலும் சிறக்கவைத்து வருவது தலைமைஆசிரியருக்கும், பிறருக்கும் சந்தோஷந்தருவதாகும்.

— நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஸ்கோவுக்குத் திரும்பிப்போ

கம்யூனிஸ்தசீனுவில் சிலவிடங்களைப் பார்த்துவிட்டு இங்கிலாந்துக்குத் திரும்பிப்போகும்வழியிலே ஆஸ்திறேலியாவுக்கு விஜயஞ்செய்த பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. கிளெமென்ற் அற்லிஎன்பவர் இம்மாதம்10-ந்திகதியன்று மெல்போண்நகரில் அந்நாட்டுஅரசாங்கம் அளித்தவரவேற்பைப் பெற்றுக்கொள்ளுமாறு நகர மண்டபம்சென்றபோது, "மஸ்கோவுக்குத் திரும்பிப்போ! சீனுவுக்குத் திரும்பிப்போ!" என்று சிலர்கூச்சலிட்டார்கள். "நாஸ்திகர்களான மாக்சிஸ்தர்களை ஜனநாயக கொள்கைகளுக்குத் திருப்பிக்கொண்டு வருவதற்காக உலகத்திற்கு வந்திருக்கும் புதியமெசியாஸ் தானேஎன்று திரு. அற்லி கருதுகிறார்" என்பனபோன்ற வசனங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களும் நகர மண்டபவரவேற்பில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

"சீனுவில் கிறீஸ்துசமயம் எவ்வித கட்டுப்பாடோ, தடையோ இல்லாது அனுசரிக்கப்பட்டு வருகிறது" என்று பிரித்தானிய தொழிற்கட்சித் தலைவரான திரு. கிளமென்ற் அற்லிகூறியது "முழுத்தவறு" என்று மெல்போண் நகர் அதிமேற்றிராணியாரான மகாமேன்மைதங்கிய டேனியல் மன்னிக்ஸ் ஆண்டவர் விளக்கிக்காட்டியிருக்கின்றார். மேலும் அவர் பேசியபோது: "அத்துணைபெரும் பிழையான தகவலைப்பரப்ப அவர் எப்படிக்காலாய்இருக்கலாம்? இதற்குமறுமொழி மிகஇலகுவானது. அவர் சிலநாள்மாத்திரம் சீனுவில் தங்கியிருந்தார். அங்கே அவருடைய விருந்தோம்பிகள் அவர்காணவேண்டுமென்று தாங்கள் விரும்பிய இடங்களைமட்டுமே அவர் கண்டார்" எனக்கூறிநின்றார்.

பின்னர் ஆண்டவர்அவர்கள் "அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஓர்அட்டவணையிலிருந்து மேற்கோள்எடுத்துக்காட்டி, சீனச்சிறைச்சாலைகளில் ஐந்துமேற்றிராணிமார் இறந்துபட்டனரென்றும், எட்டு மேற்றிராணிமார் இன்னுமே சிறையில் இருந்துவருகின்றனரென்றும், 70மேற்றிராணிமாரும், 60 குருமாரும் சீனுவிலிருந்து நாடுகடத்தப்பட்டுள்ளனரென்றும், 400பேருக்கு மேற்பட்ட சீனக்குருமாரும், பிறதர்மாரும், கன்னியாஸ்திரிமாரும் இன்னுமே சிறைவாசஞ் செய்கின்றனரென்றும் தெரிவிக்கலாயினர்.

## நாலு சங்கதிகள்

— மறுநாடுகள் கடுமையானபோட்டியிட்ட போதிலும் பிரித்தானியின் கப்பல்கட்டும்தொழில் முதன்மைவகித்துக்கொண்டே போகிறது. இவ்வாண்டின் முதல்ஏழுமாதங்களிலும் பிரித்தானி 2கோடியே 31லட்சம் பவுண் பெறுமதியான கப்பல்களையும், எஞ்சின்கள் முதலியவற்றையும் ஏற்றுமதி செய்திருக்கிறது. சென்றஆடியில்மாத்திரம் 20லட்சம்பவுணுக்குமேல் பெறுமதியான ஏழுமோட்டார்க் கப்பல்களையும், பிறகப்பல்களையும் ஏற்றுமதிசெய்திருக்கிறது.

— இங்கிலாந்திலே சால்போட்ஆசனக்கோவிலில் திரு. சாள்ஸ் கெல்ஸி என்பவரும், அவர்மனைவியாரும் இற்றைக்கு 50வருடங்களின்முன் திருமணஞ்செய்துகொண்டார்கள். சமீபத்திலேஅவர்கள் தங்கள்திருமணத் தங்கயூபிலியைக் கொண்டாடியபோது அதேஆசனக்கோவிலில், அவர்களின் திருமணத்தை நிறைவேற்றிய அதேகுருவான வண. ஆர்தர் ஓ' கொனர் சுவாமியாரே அவர்களின் தங்கயூபிலித் தோத்திரபாடற்பூசையையும் நிறைவேற்றினர்.

— சமீபத்திலே பம்பாயில் நடைபெற்ற எல். எல். பி. எனப்படும் சட்டசாஸ்திர பட்டப்பரீட்சையில் கண்தெரியாத ஒருமாணவரும் சித்தியடைந்திருக்கின்றார். 23 வயதுடைய இராசேந்திரா சர்மாஎன்ற இம்மாணவர் தனது எட்டாம்வயதிலே கண்பார்வையை இழந்தார். இவர் ஓர் பி. ஏ. பட்டதாரியுமாவர். தற்போது இவர் பம்பாய்ச் சர்வகலாசாலையில் எம். ஏ. பட்டத்துக்குப் படிக்கின்றார்.

— சென்றவாரம் றங்கூனிலிருந்து 21பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு கல்கத்தாவைநோக்கி வந்துகொண்டிருந்த விமானமொன்றை நடுவழியில் இரண்டு இராட்சதகழுகுகள் தாக்கி விமானிகள் உட்கார்ந்திருந்த இடத்தின்கண்ணுடியை உடைத்துவிட்டதனால் ஓர்விமானிக்கும், வானொலிஅதிகாரிக்கும் காயம்ஏற்பட்டது. கழுகுகள் இரண்டும் இறந்துவிட்டன. விமானம் பத்திரமாகக் கல்கத்தாவில் வந்திறங்கியது.

— இத்தாலிக்குமேலாகச் சென்ற 19-ந்திகதியன்று வால்வெள்ளிபோன்ற ஓர்வஸ்து 3,600அடிஉயரத்தில் பறந்து சென்றதைப் பல்லாயிரம் இத்தாலிய மக்கள் கண்டார்கள். பின்னர் அது திடீரென மறைந்துபோய்விட்டது. அது ஒருவால்வெள்ளிதானு? அன்றேல் புதுமாதிரியான ஓர்வெடிவிமானமா? என்றஆராய்ச்சி தற்போது நடைபெறுகிறது. அதன்வாற்பக்கம் ஒரேசொலிப்பாகஇருந்ததாம்.

— செஞ்சீனுவுக்கு விஜயஞ்செய்துவிட்டுக் கனடாவழியாக லண்டனுக்குத் திரும்பிச்செல்லுகின்ற பிரித்தானிய தொழிற்கட்சித்தலைவர் திரு. கிளெமென்ற் அற்லிஅவர்கள் சென்ற செவ்வாய்க்கிழமை சான்பிரான்சிஸ்கோநகரில் பேசியபோது, மேற்குநாடுகள் செஞ்சீனுவுடன் நட்புப்பூண்டு கொள்ளாதுபோனுல் அது சோவியற்ருஷியாவுடன் நெருங்கியஉறவு கொண்டாடத்தொடங்குமெனக் கூறியிருக்கின்றார்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

ஏழையாகிய எனதுஇல்லிடம் சம்பந்தமாக ஏற்பட்டிருந்த வழக்கில் எனக்கு நீதிவழங்க அருள்புரியுமாறு சதாசகாய மாதாவைப் பத்தியோடு வேண்டிக்கொண்டுவந்தேன். மாதாவின்அருளால் வழக்கில் எனக்கு நீதிவழங்கப்பட்டு இல்லிடம்கிடைத்தது. அதற்கு நன்றியறிதலாக நேர்த்திப்படி இதனைப்பிரசுரிக்கிறேன். மாதாவின்புகழ் எங்கும் பரவுவதாக.

அம்புறேசியாப்பறுஞந்து
மணற்சேனை, பேதுருப்பிள்ளை
கொச்சிக்கடை.

## அறிவுச் சுடர்

1. அதிமேற்றிராணியாரான சகோதரர்இருவர் தற்போது இருக்கின்றனரா?

ஆம், இருக்கின்றனர். இவர்களில் ஒருவர் கனடாதேச ஷெர்புறுக்நகர கபாநுஅதிமேற்றிராணியார். மற்றவர் ஊகண்டாநாட்டின் றுபாகாநகர கபாநுஅதிமேற்றிராணியார். இவர்களின் சகோதரர் வண. ஜே. பி. கபானு சுவாமியார்.

2. தருமங்கொடுப்பதால் கத்தோலிக்கர்எவரும் பலன்களை அடையமுடியுமா?

ஆம், யேசு, மரியாய், சூசையப்பருக்கு மகிமையும், தோத்திரமும்உண்டாகும் படியாக மூன்றுபேருக்கு உணவுகொடுக்கிறவர்கள் பின்வருமாறு பலன்களை அடைந்து கொள்வார்கள். (1) ஏழுவருட ஏழுமண்டலப்பலன். (2) பாவசங்கீர்த்தனஞ்செய்து, தேவநற்கருணை பெற்று, பாப்பாண்டவரின் கருத்துக்காகமன்றுடிக்கொள்ளும் வழமையான நிபந்தனையுடன் அன்றுதினம்மாத்திரம் ஓர்பரிபூரணபலன். (3) தருமமாக உணவுகொடுபடும் தருணத்தில் சமுகமளித்துத் துணையாய்நிற்கும் குடும்பத்தினருக்கும், பணியாளருக்கும் நூறுநாட்பலன்.

## சிந்தாத்திரைமாதா திருநாள்

பெரியமுறிப்பு, அர்ச். சிந்தாத்திரைமாதாதிருநாள் சென்ற 16-9-54 வியாழக்கிழமை அதிசிறப்பாகக்கொண்டாடப்பட்டது. 13-ந் திகதி தொடக்கம் வண. பிலிப் பொன்னையா சுவாமியவர்களால் மாலைஆராதனைபாடிச் சுரூப எழுந்தேற்றம் செய்யப்பட்டு வந்தது. 16-ந் திகதி திவ்விய பூசையின்பின் நடைபெற்ற திருச்சுரூபசுற்றுப்பிரகாரத்தில் ஏராளமானபக்தர்கள் கலந்துகொண்டார்கள். சாயந்தரம் அன்னதானம் வழங்கப்பட்டது இரவு பாடசாலைமாணவர்களால் கெட்டகுமாரன் நாடகமும், சிரிக்காதீர்என்னும் நாடகமும் நடிக்கப்பட்டன. முடிவில் பாடசாலைமாணவர்கள் தங்கள்ஆசிரியர் ஜே. ஏ. நாதருக்கு அன்பளிப்புச்செய்து மகிழ்ந்தார்கள். — நிருபர்

## பிரிவுஉபசார விழா

ஈர் இருபதுஆண்டுகளாக ஆசிரிய சேவை புரிந்தவரும், எமதுமனக்கண் முன்பாகமறையவோ, அன்றேல் எமது உளத்திலிருந்து அகலவோ முடியாதவருமான சங். சகோதரர் பிரான்சிஸ் சேவியர், F. B. M. அவர்கள் எமக்கும், எம்போன்ற பலருக்கும் ஆற்றியுள்ள அரியசேவைகளை ஞாபகப்படுத்தி இறைவனுக்கு நன்றிகூறுமுகமாகச் சலாபஆசனக்கோயிலில் அதிவண. பி. ஈ. பெர்நாந்துப்பிள்ளை சுவாமியவர்களால் சென்ற 11-9-54 சனிக்கிழமை காலை ஓர்தோத்திரப்பூசை நிறைவேறியது. அதற்கென அன்று காலை 7 மணியளவில் பிரிவுஉபசாரநாயகர் அநேக மாணவர்களும், ஆசிரியர்களும், இன்னும் பலபெரியோர்களும் முன்செல்ல, பாண்டுவாத்தியம்முழங்க, சபைத்துறவிகள்பலர் புடைசூழப் பாடசாலையிலிருந்து கோயிலுக்கு அழைத்துச்செல்லப்பெற்றனர்.

திவ்வியபூசைமுடிந்ததும் அவரின் ஞாபகமாக அனைவரையும்வைத்து ஓர் புகைப்படம் பிடிக்கப்பட்டது. அதன்மேல் அவர் கோயிலுக்கு அழைத்துச் சென்றவாறே பாடசாலைக்கும் அழைத்துவரப்பட்டார். பாடசாலைமாணவர் ஓர் வரவேற்புக் கீதம்பாடிப் பிரிவோபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தனர். அவ்வேளை அதிவண. பி. ஈ. பெர்நாந்துப்பிள்ளை சுவாமியவர்கள் ஓர்சொற்பொழிவுநிகழ்த்தினர். பின்னர் பலவித சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. திரு. எம். வி. பெரேரா, எஸ். ஏ. பிள்ளை, எஸ். ஈஸ். பெர்நாந்து, எலியாஸ்லேலாவ் முதலாம்ஆசிரியர்களால் பிரியாவிடைநாயகரை வாழ்த்திப் பலசொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. சிரேஷ்டர் சங். சகோதரர் ஈ. மரிய யோசெப், F. M. B. அவர்களால் தேவஅழைத்தல்பற்றிய ஓர்சிறிய சொற்பொழிவும் நிகழ்த்தப்பட்டது.

ஈற்றில் சங். சகோதரர் போல்பீரிஸ் அவர்களால் தமிழ்மொழியிலும், சிங்களமொழியிலும் முடிவுரைகூறப்பட்டதும் பிரியாவிடைக்கீதம் மாணவர்களால் படிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து 11-30 மணியளவில் தேசிய கீதம் தமிழ்மொழியில் தொனிக்க, பாண்டுவாத்தியங்கள் இசைக்க, சபையோர் அனைவருக்கும் பிரிவுஉபசாரநாயகரின் உருவம்பொறிக்கப்பட்ட ஞாபகசின்னம் அருளப்பெற்று விழாநிறைவாயிற்று. — W. W. P.

## ஞான வொடுக்கம்

வதிரி—கரவெட்டிக் கத்தோலிக்கமக்களின் ஞானவொடுக்கம் சென்ற 5-9-54ஞாயிறுபிற்பகல் வண. எம். எஸ். நல்லையாசுவாமியவர்களைப் போதகராகக்கொண்டு ஆரம்பமாயிற்று. கரவெட்டி பரலோகமாதாகோவிலில் நான்குநாட்களும், வதிரி அர்ச். அந்தோனியார்கோவிலில் நான்குநாட்களுமாகத் தொடர்ந்துநடைபெற்ற ஞானவொடுக்கத்தில் பெருந்தொகையான மக்கள் பங்குபற்றினுர்கள். போதகரின் அருட்சிக்குரிய ஞான போதகமும், பக்திமுயற்சிகளும் மக்களை ஆன்மஈடேற்றசிந்தனையில் ஆழ்த்திவிட்டன. நாள்தோறும் பலகுருமார் பாவசங்கீர்த்தனம் கேட்டுவந்தனர். முன்னொருபோதும் கண்டுகேட்டிராதவிதமாய் அருமையான தர்க்கப்பிரசங்கமொன்று வண. ஜி. ரி. பாலசுந்தரம்சுவாமி அவர்களால் இடையிடையே இன்னிசைக்கீதங்களுடன் நடத்தப்பட்டது. சுவாமியவர்கள், பேராசிரியர் வேதநாயகம்அவர்களின் உதவியுடன் ஆற்றிய இவ்வரியசொற்பெருக்கை வியந்து ஆசிரியர் பி. அந்தோனிப்பிள்ளையவர்கள் நன்றிகூறிநின்றார். ஈற்றில் 12-ந்தேதி ஞாயிறுவாரம் முடிவுதினமன்று மக்கள் திவ்வியபூசைகண்டு திருவிருந்தருந்தினார்கள். ஞானஸ்நான வாக்குத்தத்தமும் புதுப்பிக்கப்பட்டது. பூசையின்பின் பிரசங்கியாருக்கு நன்றித்துதிகூறவான் பங்குக்கிறீஸ்தவர்கள் கூடினார்கள். அவ்வேளை சுவாமியாரின் சாதனைகளையும், போதனைகளையும் வியந்து ஆசிரியர்கள் திரு. என். எம். சிங்காரயர், பி. இராயப்பு, பி. ஏ. சேனதிராசா என்போரால் சொற்பெருக்குகள் நிகழ்த்தப்பெற்றுத் தெட்சணையும் வழங்கப்பட்டது. இவற்றிற்கெல்லாம் காரணகர்த்தாவாயிருந்த கட்டளைக்குரவர் வண. பி. ஈ. அல்பிரெட்சுவாமியவர்களின்ஆற்றல் போற்றற்பாலதாகும்.

— கத்தோலிக்கன்

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

எங்கள் பிதாவாகிய அர்ச். பிரான்சீஸ்குவின் திருநாள் மகோற்சவம் வருகிறஐப்பசிமாதம் 4-ந்திகதி வருகின்றது. அதற்கு ஆயத்தமாக ஆசனக்கோவிலில் திரிதின ஆராதனை நடைபெறும். திருநாளன்று திவ்விய பூசை 6-30 மணிக்கு அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில்நடக்கும். அத்தருணம் சகோதரர், சகோதரிகள் தங்கள் சபைஅங்கிதரித்துத் திருவிருந்தருந்தி இத்திருநாளைப் பத்தியோடும் ஆடம்பரசிறப்போடும் கொண்டாடக்கடவார்கள். பூசையின்பின் 3 சகோதரிகள் தங்கள் வாக்குத்தத்தத்தைச் செய்து நிலையந்தஸ்திற் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். சாயந்தரம் 4-30 மணியளவில் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும் பொதுக்கூட்டமும் இருக்கும். இதன்பின் சிற்றுண்டி உபசாரணையோடு திருநாள் முடிவடையும். மறுநாட் காலை 6-15 மணிக்கு மரித்துப்போன சகோதரர்களின் ஆன்மஇளைப்பாற்றிக்காகத் திவ்வியபூசை அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். ஐப்பசி மாதம் 3-ந்திகதி ஞாயிற்றுக்கிழமையாயிருப்பதால் கடன் ஒருசந்தியைச் சகோதரர்கள் அதற்குமுந்தின நாளாகிய 2-ந்திகதி சனிக்கிழமை அனுசரிப்பார்களாக. ஐப்பசி மாதத்தில் பரிபூரணபலன் அடையக்கூடிய நாட்கள்: 2, 4, 5, 7, 11, 12, 13, 19, 23, 26, 30, 31. ஐப்பசிமாதம் 4-ந்திகதி பொதுப்பாவமன்னிப்பு இருக்கும்.

A. S. FRANCIS OF MARY
for Director

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 23-1954.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org